# தொழுகை விளக்கம்

Tamil Book about

# Namaz

## தொழுகை விளக்கம்

| | |
|---|---|
| Written by | : Moulana Muhammad Umar H.A |
| Composed by | : O.M. Muzzammil Ahmad H.A |
| Present Edition | : 2019 |
| Copies | : 1000 |
| Published by | : Tamil Nadu Book Publishing Committee,<br>Ahmadiyya Muslim Jama'at<br>11,U.I. Colony First Main Road,<br>Kodambakkam, Chennai-600024<br>Tamil Nadu |
| For | : Nazarat Nashr-o-Isha'at Qadian<br>Sadr Anjuman Ahmadiyya, Qadian<br>Gurdaspur, Punjab-143516 |
| Printed at | : Script Printers<br>Choolaimedu, Chennai-94 |

Noorul Islam Tool Free No: 1800-3010-2131
Tamil Toll Free No: 1800-425-40000

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தொழுகைக்கான நிபந்தனைகள் | 6 |
| 2. | உளூ செய்யும் முறை | 7 |
| 3. | தொழுகைக்குரிய நேரங்கள் | 12 |
| 4. | பள்ளிவாசலின் ஒழுங்குமுறைகள் | 13 |
| 5. | பாங்கு | 14 |
| 6. | இகாமத் | 18 |
| 7. | தொழும் விதம் | 19 |
| 8. | ஜமாஅத் (கூட்டுத்) தொழுகை | 34 |
| 9. | தொழுகையைப் பற்றிய பொதுவான விஷயங்கள் | 35 |
| 10. | வித்ர் தொழுகை | 38 |
| 11. | தஹஜ்ஜுது தொழுகை | 41 |
| 12. | தராவீஹ் தொழுகை | 42 |
| 13. | ஜுமுஆ தொழுகை | 44 |
| 14. | பெருநாள் தொழுகை | 49 |
| 15. | ஜம்வு தொழுகை | 50 |
| 16. | கஸ்ர் தொழுகை | 52 |
| 17. | ஜனாஸா தொழுகை | 53 |
| 18. | இஸ்திகாரா தொழுகை | 58 |
| 19. | கிரகணத் தொழுகை | 60 |
| 20. | இஸ்திஸ்கா தொழுகை | 60 |
| 21. | ஹாஜத்துத் தொழுகை | 62 |

# தொழுகை பற்றிய விளக்கம்

மனிதனைப் படைத்ததன் நோக்கம் இறைவனை வணங்குவதேயாகும் என திருக்குர்ஆனில் இறைவனே கூறுகிறான். எல்லா மார்க்கங்களும் இதனையே வலியுறுத்திக் கூறியிருக்கின்றன. இதனை திருக்குர்ஆன் மிகத் தெளிவாக இவ்வாறு கூறுகிறது:

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنْسَ إِلَّا لِيَعْبُدُونِ

வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃ' புதூன். பொருள்: நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். *(திருக்குர்ஆன் அதிகாரம் 51 வசனம் 57)*

மேலும் எல்லா மக்களுக்கும் இறைவன் இதனையே வலியுறுத்திக் கூறியிருக்கிறான். அவன் அனைத்து மக்களையும் நோக்கி, 'மக்களே! நீங்கள் உங்களையும் உங்களுக்கு முன்னிருந்தோரையும் படைத்த உங்கள் இறைவனை மட்டும் வணங்குங்கள். அதனால் நீங்கள் ஆன்மீக, பௌதீக பலவீனங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளலாம்' எனக் கூறுகிறான். *(திருக்குர்ஆன் அதிகாரம் 2 வசனம் 22)*

தொழுகை இஸ்லாத்தின் இரண்டாவது தூண் ஆகும். இறைநம்பிக்கைக்கு அடுத்தபடியாக செயலைப் பொருத்தவரை தொழுகை முதலிடம் வகிக்கிறது. இது ஒவ்வொரு முஸ்லிமுக்கும் கட்டாயக் கடமையாகும். இது குறித்து அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்:

''நிச்சயமாக தொழுகை நம்பிக்கை கொண்டவர்கள் (முறைப்படி) குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்ற வேண்டிய ஒரு கடமையாகும்.'' *(திருக்குர்ஆன் அதிகாரம் 4 வசனம் 104)*

தொழுகையின் பயனைப் பற்றி திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது: ''நிச்சயமாக தொழுகை வெட்கக்கேட்டிலிருந்தும், பகிரங்கமான தீமையிலிருந்தும் (ஒருவரைத்) தடுக்கின்றது.'' *(திருக்குர்ஆன் அதிகாரம் 29 வசனம் 46).* இதன் கருத்து தொழுகை, மறைமுகமாக செய்யும் பாவங்களிலிருந்தும், வெளிப்படையாகச் செய்யும் பாவங்களிலிருந்தும் மனிதனைப் பாதுகாக்கிறது என்பதாகும்.

தொழுகையின் சிறப்பு பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறியிருக்கிறார்கள்:

''தொழுகை நம்பிக்கை கொண்டவர்களின் மிஃராஜ் (அதாவது இறைவனை அணுகுவதற்கான ஏணிப்படிகள்) ஆகும்.'' மேலும் அவர்கள் கூறினார்கள்: ''இறைநம்பிக்கை கொண்டவரையும் நிராகரிப்பவரையும் வேறுபடுத்திக் காட்டுவது தொழுகையேயாகும்.''

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தொழுகை பற்றி கீழ்வருமாறு கூறுகிறார்கள்:

''தொழுகை ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். நபிமொழியில் வருவதாவது, இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஒரு சமுதாயம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்களுக்கு தொழுகையை மன்னித்து விடுங்கள். ஏனெனில் நாங்கள் ஆடு மாடுகளை மேய்ப்பதால் ஆடைகள் சுத்தமானவையாக இருப்பதில்லை. எங்களுக்கு நேரமும் கிடைப்பதில்லை என்று கூறியது. அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தொழுகை இல்லை என்றால் அந்த மார்க்கத்தில் என்ன இருக்க முடியும்? தொழுகை இல்லாத மார்க்கம் ஒரு மார்க்கமே அல்ல எனக் கூறினார்கள்.............இறையன்பையும், இறையச்சத்தையும் எப்போதும் மனதில் வைத்திருப்பதற்குப் பெயர்தான் தொழுகை ஆகும்." *(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 254)*

எனவே தொழுகையை குறித்த நேரத்தில் அதன் விதிமுறைகளின்படி கடைபிடிக்க வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் விதிக்கப்பட்ட கடமையாகும்.

## தொழுகைக்கான நிபந்தனைகள்

தொழுகையை ஆரம்பிப்பதற்கு முன் ஐந்து விஷயங்கள் இருப்பது அவசியமானதாகும்.

1. நேரம்:

2. தூய்மை: (சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப குளிப்பது, உளூ செய்வது, தயம்மும் செய்வது. மேலும் தொழும் இடமும் தூய்மையாக இருக்க வேண்டும்.)

3. மறைக்க வேண்டிய இடத்தை மறைப்பது: (அதாவது பொருத்தமான ஆடையை அணிவது.)

4. கிப்லாவை முன்னோக்குவது: (அதாவது முகம் கிப்லாவை நோக்கி இருக்க வேண்டும்.)

5. நிய்யத்: (ஃபர்ழ் தொழுகையா? சுன்னத் தொழுகையா? என்பதற்கான நிய்யத் வைத்தல்)

### தொழுகைக்கான ரக்அத்துகள்

| தொழுகை | ஃபர்ழ் | ஃபர்ழுக்கு முன் சுன்னத் | ஃபர்ழுக்கு பின் சுன்னத் | நஃபில்/வித்ர் |
|---|---|---|---|---|
| ஃபஜ்ர் | 2 | 2 | - | - |
| ளுஹ்ர் | 4 | 4 | 2 | - |
| அஸ்ர் | 4 | - | - | - |
| மக்ரிப் | 3 | - | 2 | - |
| இஷா | 4 | - | 2 | - |
| வித்ர் | - | - | - | 3 |

✸ உளூ:

தொழுவதற்கு முன் உளூ செய்வது அவசியமானதாகும். உளூ எவ்வாறு செய்யப்படுகிறதென்றால், முதலில் தண்ணீரினால் கைகளை மணிக்கட்டு வரை கழுவ வேண்டும். பிறகு வாயில் தண்ணீர் விட்டு வாய்க் கொப்பளிக்க வேண்டும். மூக்கில் தண்ணீர் விட்டு மூக்கை சுத்தம் செய்ய வேண்டும். பிறகு முழு முகத்தையும் கழுவ வேண்டும். பிறகு இரு கைகளையும் முழங்கை வரை கழுவ வேண்டும். பிறகு கைகளை ஈரப்படுத்தி தலை முடியைத் தடவ வேண்டும். அதற்குப் பிறகு இரு கால்களையும் கரண்டை வரை கழுவ வேண்டும்.

✸ உளூ செய்யும் முறை:


பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் எனக் கூறி உளூ செய்ய ஆரம்பிக்க வேண்டும். முதன் முதலில் கைகளை மணிக்கட்டு வரைக் கழுவுங்கள்.





✸ வலக் கையில் தண்ணீரை எடுத்து மூன்று முறை வாய்க் கொப்பளியுங்கள். வாய்க் கொப்பளித்த பிறகு மூன்று முறை மூக்கில் தண்ணீர் விட்டு இடக்கையால் அதை சுத்தம் செய்யுங்கள்.





✸இரு கைகளினாலும் தண்ணீரை எடுத்து முகம் முழுவதையும் மூன்று முறை கழுவுங்கள்.





✸ அதற்குப் பிறகு முதலில் வலக் கையையும் அதன் பிறகு இடக் கையையும் முழங்கை வரை மூன்று முறை கழுவுங்கள்.




✸ பிறகு இரு கைகளையும் ஈரப்படுத்தி விரல்களை நெற்றியிலிருந்து மேலிருந்து கொண்டு சென்று தலையில் தடவியவாறு கழுத்து வரை கொண்டு செல்லுங்கள். பிறகு அதைத் திரும்பக் கொண்டு வாருங்கள். பிறகு இரு கைகளையும் கழுத்தில் தடவுங்கள். அதற்குப் பிறகு சுட்டு விரலை காதுகளில் தடவியவாறு பெரு விரலை காதுகளின் பின்பக்கமாகக் கொண்டு வாருங்கள். இதற்கு மஸஹ் செய்தல் என்று கூறுகிறோம்.





மஸஹ் செய்த பிறகு முதலில் வலது காலையும் பிறகு இடது காலையும் கரண்டையையும் சேர்த்து கழுவுங்கள்.





ஒருவர் உளூ செய்த பின் கால்களில் காலுறைகள் (Socks) அணிந்து கொண்டால் திரும்ப உளூ செய்யும்போது அந்தக் காலுறைகளைக் கழற்ற வேண்டிய அவசியமில்லை. உளூ செய்து விட்டு ஈரக் கைகளால் காலுறைகளின் மீது தடவினால் போதும். இதற்கு மஸஹ் செய்தல் என்பர்.

இவ்வாறு 24 மணி நேரம் வரை காலுறைகளைக் கழற்றாமல் அதன் மீது மஸஹ் செய்வது ஆகுமானதாகும். பயணியாக இருந்தால் மூன்று நாள் வரை காலுறைகளை அகற்றாமல் அவற்றின் மீது தடவிக் கொள்ளலாம். எனினும் மூன்று விரல்கள் வெளியில் தெரியும் அளவுக்கு காலுறைகள் கிழிந்திருப்பின் இவ்வாறு மஸஹ் செய்வது அனுமதிக்கப்படவில்லை.

**உளூ செய்து முடிந்த பிறகு செய்ய வேண்டிய துஆ:**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَ اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

அஷ்ஹது அல் லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லா ஷரீகலஹூ. வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ.

பொருள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். அவன் ஒருவனே. மேலும் முஹம்மது அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்.

அதன் பிறகு பின்வரும் துஆவை செய்ய வேண்டும்:

اَللّٰهُمَّ اجْعَلْنِيْ مِنَ التَّوَّابِيْنَ وَاجْعَلْنِيْ مِنَ الْمُتَطَهِّرِيْنَ

அல்லாஹும் மஜ்அல்னீ மினத்தவ்வாபீன வஜ்அல்னீ மினல் முததஹ்ஹிரீன்.

பொருள்: இறைவா! நீ என்னை பாவமன்னிப்புக் கோருகின்றவர்களோடும் தூய்மையானவர்களோடும் சேர்த்தருள்வாயாக.

### உளூவை முறிக்கும் விஷயங்கள்:

1. மலம், சிறுநீர் கழித்தல் 2. மலத்துவாரத்திலிருந்து சத்தத்துடனோ அல்லாமலோ காற்று வெளியேறுதல் 3. படுத்துக் கொண்டோ அல்லது சாய்ந்து உட்கார்ந்து கொண்டோ தூங்குதல் 4. மயக்கமடைதல்.5. உடலிருந்து இரத்தம், சீழ், விந்து ஆகியவை வெளியேறுதல் 6. வாந்தி எடுத்தல் ஆகிய காரணங்களால் உளூ முறிந்து விடும்.

### தயம்மும்:

உளூ செய்வதற்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்றாலோ, தண்ணீர் பயன்படுத்தினால் உடல் நலக் குறைவு ஏற்படும் என்ற பயம் இருந்தாலோ 'உளூ'வுக்குப் பகரமாக தயம்மும் செய்யலாம். சுத்தமான மண்ணிலோ அல்லது மண் உள்ள பொருள்களிலோ இரண்டு கைகளையும் அடித்து முதலில் முகத்தில் தடவ வேண்டும். பிறகு இரண்டு கைகளையும் அடித்து முழங்கை வரை தடவ வேண்டும். ஒரேயொரு தடவை மண்ணில் அடித்து அக்கைகளினால் முகத்தையும், கைகளையும் தடவினால் அதுவும் போதுமானதேயாகும்.

தயம்மும் உளூவுக்குப் பகரமாக உள்ளது. தண்ணீர் கிடைத்து விட்டால் தயம்மும் முறிந்து விடும். மேலும் எந்த விஷயங்களால் உளூ முறிந்து விடுமோ அவற்றால் தயம்முமும் முறிந்து விடும்.

## தொழுகைக்குரிய நேரங்கள்

தொழுகைக்குரிய ஐந்து விதிமுறைகளில் முதல் விதி, குறித்த நேரத்தில் தொழுவதாகும்.தொழுகைக்குரிய நேரங்கள் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | ஃபஜ்ர் | கிழக்கு வெளுக்கும் நேரத்திலிருந்து சூரிய உதயத்திற்கு முன்னுள்ள நேரம் வரை |
| 2. | ளுஹ்ர் | சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்த நேரம் முதல் ஒன்றின் நிழல் அதன் உயரத்திற்கு சராசரியாகும் வரை உள்ள நேரம் |
| 3. | அஸ்ர் | ஒன்றின் நிழல் அதன் உயரத்தை விட அதிகமாகும் நேரத்திலிருந்து சூரியன் மறைவதற்கு முன் உள்ள நேரம் வரை |
| 4. | மக்ரிப் | சூரியன் மறைந்த நேரத்திலிருந்து செவ்வானம் மறையும் நேரம் வரை |
| 5. | இஷா | செவ்வானம் மறைந்த நேரத்திலிருந்து நடுஇரவு வரை |

## பள்ளிவாசலின் ஒழுங்குமுறைகள்

பள்ளிவாசல் இறைவனை வணங்குவதற்கென்றே ஏற்படுத்தப்பட்ட இடமாகும். ஏக இறைவனை வணங்குகின்ற அனைவருக்கும் அதில் தொழுவதற்கு உரிமை உண்டு. பள்ளிவாசலுக்குத் தொழ வருகின்றவரைத் தடுப்பது மிகப் பெரிய குற்றமாகும்.

பள்ளிவாசலில் அமைதி காக்கப்பட வேண்டும். வீண் பேச்சு அங்கு கூடாது. பள்ளிவாசலில் விற்பனை செய்வதும் வாங்குவதும் தடுக்கப்பட்டுள்ளது. காணாமற்போன பொருள்கள் பற்றிய அறிவிப்பும் அங்கு செய்யப்படக் கூடாது என நபிமொழியில் வந்துள்ளது.

பள்ளிவாசலில் நுழையும்போது பின்வரும் துஆவை ஓத வேண்டும்:

بِسْمِ اللّٰهِ الصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى رَسُوْلِ اللّٰهِ اَللّٰهُمَّ
اغْفِرْلِىْ ذُنُوْبِىْ وَافْتَحْ لِىْ اَبْوَابَ رَحْمَتِكَ

பிஸ்மில்லாஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹ். அல்லாஹும் மக்ஃஃபிர்லீ ஸுனூபீ வஃஃப்தஹ்லீ அப்வாப ரஹ்மதிக்க.

பொருள்: அல்லாஹ்வின் பெயரால் (நுழைகின்றேன்). அல்லாஹ்வின் தூதர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக. இறைவா! என் பாவங்களை மன்னிப்பாயாக. மேலும் உன் கருணையின் வாசல்களை எனக்காகத் திறப்பாயாக.

பள்ளிவாசலுக்குள் நுழையும்போது வலது காலை முன் வைத்து சலாம் கூறி நுழைய வேண்டும். பள்ளிவாசலில் நுழைந்தவுடன் இரண்டு ரக்அத் தொழுவது சுன்னத் ஆகும். இது தஹிய்யத்துல் மஸ்ஜிது (பள்ளிவாசலுக்கான அன்பளிப்புத் தொழுகை) என்றழைக்கப்படுகிறது.

பள்ளிவாசலிலிருந்து வெளியேறும்போது கீழ்வரும் துஆவை ஓத வேண்டும்:

بِسْمِ اللّٰهِ الصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى رَسُوْلِ اللّٰهِ اَللّٰهُمَّ

اغْفِرْ لِيْ ذُنُوْبِيْ وَافْتَحْ لِيْ اَبْوَابَ فَضْلِكَ

பிஸ்மில்லாஹிஸ் ஸலாத்து வஸ்ஸலாமு அலா ரஸூலில்லாஹ். அல்லாஹும் மக்ஃபிர்லீ ஸுனூபீ. வஃப்தஹ்லீ அப்வாப ஃபழ்லிக.

பொருள்: அல்லாஹ்வின் பெயரால் (வெளியேறுகின்றேன்). அல்லாஹ்வின் தூதர் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக. இறைவா! என் பாவங்களை மன்னிப்பாயாக. மேலும் உன் அருளின் வாசல்களை எனக்காகத் திறப்பாயாக.

**பாங்கு**

ஒவ்வொரு தொழுகைக்குரிய நேரம் வரும்போதும் பள்ளிவாயிலில் உரத்த குரலில் பாங்கு சொல்ல வேண்டும். பாங்கு சொல்கின்றவர் கிப்லாவின் பக்கம் முகம் திருப்பி இரண்டு காதுகளிலும் விரல்களை வைத்து இவ்வாறு பாங்கு சொல்ல வேண்டும்:

اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰه

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰه اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰه

اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللّٰه حَيَّ عَلَى الصَّلٰوة حَيَّ عَلَى الصَّلٰوة

حَيَّ عَلَى الْفَلَاح حَيَّ عَلَى الْفَلَاح اَللّٰهُ اَكْبَرُ اَللّٰهُ اَكْبَرُ

لَا اِلٰهَ اِلَّا اللّٰه

அல்லாஹு அக்பர் (4 தடவை)

அஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹ் (2 தடவை)
அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் (2 தடவை)

ஹய்ய அலஸ் ஸலாஹ் (2 தடவை)

ஹய்ய அலல் ஃபலாஹ் ( 2 தடவை)

அல்லாஹு அக்பர். அல்லாஹு அக்பர்.

லாயிலாஹ இல்லல்லாஹ்.

பொருள்: அல்லாஹ் மிகப் பெரியவன். ( இவ்வாறு நான்கு முறை கூறப்படுகிறது). அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். (இவ்வாறு இரண்டு முறை கூறப்படுகிறது). முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என நான் சாட்சி கூறுகிறேன். (இவ்வாறு இரண்டு முறை கூறப்படுகிறது). தொழுகையின் பக்கம் வாருங்கள். (இவ்வாறு இரண்டு முறை கூறப்படுகிறது). வெற்றியின் பக்கம் வாருங்கள். (இவ்வாறு இரண்டு முறை கூறப்படுகிறது). அல்லாஹ் மிகப் பெரியவன். (இவ்வாறு இரண்டு முறை கூறப்படுகிறது). அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை.

பாங்கு கூறுபவர் ஹய்ய அலஸ் ஸலாஹ் என்று கூறும்போது வலப் பக்கமும், ஹய்ய அலல் ஃபலாஹ் என்று கூறும்போது இடப் பக்கமும் முகம் திருப்பிக் கூற வேண்டும்.

சுப்ஹ் தொழுகைக்காக பாங்கு சொல்பவர் ஹய்ய அலல் ஃபலாஹ் என்று இருமுறை கூறிய பிறகு அஸ்ஸலாத்து கைரும்மினன் நவ்ம் (தூக்கத்தை விட தொழுகை மேலானது) என்று இரண்டுமுறை கூற வேண்டும்.

பாங்கு சொல்லும்போது பாங்கைக் கேட்பவர்கள் அதே சொல்லை தாமும் மெதுவாகக் கூற வேண்டும். ஆனால் ஹய்ய அலஸ் ஸலாஹ் என்று கூறும்போதும் ஹய்ய அலல் ஃபலாஹ் என்று கூறும்போதும் லா ஹவ்ல வலா குவ்வத இல்லா பில்லாஹ் என்று கூற வேண்டும். இதன் பொருள்: தீமையிலிருந்து விலகுகின்ற ஆற்றலும், நன்மையைச் செய்கின்ற சக்தியும் அல்லாஹ்விடமே அன்றி வேறெங்குமில்லை என்பதாகும்.

பாங்கில் சில சொற்களுக்குப் பதிலாக அதே சொற்களை திரும்பக் கூறுவதிலும் சில சொற்களுக்குப் பதிலாக வேறு சொற்களைக் கூறுவதிலும் ஒரு தத்துவம் அடங்கியிருக்கிறது. பாங்கில் சில நம்பிக்கைக்குரிய சொற்களும் சில செயலுக்குரிய சொற்களும் இருக்கின்றன. எந்தச் சொற்கள் நம்பிக்கைக்குரியவையாக இருக்கின்றனவோ அவற்றிற்கு விடையாக அதே சொற்களைத் திரும்பச் சொல்ல வேண்டும்.

உதாரணமாக, ‘லாயிலாஹ இல்லல்லாஹ்’ வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பது நம்பிக்கையை வெளிப்படுத்தும் சொற்களாகும். எனவே அதனைக் கேட்பவர்களும் அத்தகைய நம்பிக்கை தங்களுக்கும் இருக்கிறது என்பதை உணர்த்துவதற்காக அதே சொற்களை திருப்பிக் கூறுமாறு கற்பிக்கப்பட்டுள்ளது.

ஹய்ய அலஸ் ஸலாஹ்; (தொழுகைக்கு வாருங்கள்) ஹய்ய அலல் ஃபலாஹ் (வெற்றியின் பக்கம் வாருங்கள்) என்ற சொற்கள் செயலுக்குரியவை. தொழுவதும், வெற்றிப் பாதையில் நடப்பதும் செயல்களாகும். மனிதனோ, தனது

செயல்களின் விளைவுகளை அறியாதவனாகவும் அவற்றை சீர்செய்யும் ஆற்றல் அற்றவனாகவும் இருக்கின்றான். ஆகவே அவன், 'லா ஹவ்ல வலா குவ்வத்த இல்லா பில்லாஹ்' (தீமையிலிருந்து விலகுகின்ற ஆற்றலும், நன்மையைச் செய்கின்ற சக்தியும் அல்லாஹ்விடமே அல்லாது வேறெங்குமில்லை) என்று கூறி, இறைவனிடமே உதவி கேட்கிறான்.

சுப்ஹ் தொழுகைக்கான பாங்கில் 'அஸ்ஸலாத்து கைரும் மினன் நவ்ம்' என்று கூறும்போது ஸதக்த வ பரர்த்த (உண்மையைச் சொன்னீர்; நன்மையைச் செய்தீர்) என்று கூற வேண்டும்.

பாங்கு சொன்னவரும் கேட்டவரும் கீழ்வரும் துஆவை ஓத வேண்டும்:

اَللّٰهُمَّ رَبَّ هٰذِهِ الدَّعْوَةِ التَّآمَّةِ وَالصَّلٰوةِ الْقَائِمَةِ
اٰتِ مُحَمَّدَنِ الْوَسِيْلَةَ وَالْفَضِيْلَةَ وَالدَّرَجَةَ الرَّفِيْعَةَ
وَابْعَثْهُ مَقَامًا مَّحْمُوْدَنِ الَّذِىْ وَعَدْتَّهٗ اِنَّكَ لَا تُخْلِفُ الْمِيْعَادَ

அல்லாஹும்ம ரப்ப ஹாதிஹித் தஃவத்தித் தாம்மத்தி வஸ்ஸலாத்தில் காயிமத்தி ஆத்தி முஹம்மதனில் வஸீலத்த வல்ஃபழீலத்த வத்தரஜதர் ரஃபீஅத்த வப்அஸ்ஹு மகாமம் மஹ்மூதனில்லதீ வஅத்தஹு இன்னக லா துக்லிஃபுல் மீஆது.

பொருள்: இந்த முழுமையான அழைப்பிற்கும் நிலையான தொழுகைக்கும் அதிபதியான அல்லாஹ்வே! முஹம்மது (ஸல்) அவர்களுக்கு ஊடகமாக இருக்கின்ற

தகுதியையும், சிறப்பையும், உயர்ந்த அந்தஸ்தையும் வழங்குவாயாக. நீ வாக்குறுதியளித்துள்ள புகழுக்குரிய இடத்தையும் அவர்களுக்கு வழங்குவாயாக. நிச்சயமாக நீ வாக்குறுதியை மீறுவதில்லை.

## இகாமத்

தொழுகை ஆரம்பமாவதற்கு முன் இகாமத் கொடுக்கப்பட வேண்டும். இமாம் முஸல்லாவில் (தொழும் இடத்தில்) நின்ற பிறகே இகாமத் கொடுக்கப்பட வேண்டும். தொழுகையில் அனைவரும் சஃஃப்பில் (அணியில்) நேராக நிற்க வேண்டும். இது தொழுகையின் முழுமைத் தன்மைக்கு மிகவும் அவசியமாகும். தொழும்போது அணிகள் சீராக இருக்க வேண்டியதன் அவசியத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். கோணலாக அணியில் உள்ள மக்களின் உள்ளங்களிலும் கோணல் இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்கள். அணிகளில் இடைவெளியின்றி நெருங்கி நிற்க வேண்டும்.

அணிகள் வரிசைப்படுத்தி சரி செய்யப்பட்ட பின்னர் பாங்கு சொன்னவரோ அல்லது அவரால் அனுமதி வழங்கப்பட்டவரோ கீழ்வருமாறு இகாமத் கூற வேண்டும்:

اَللهُ اَكْبَرُ اَللهُ اَكْبَرُ اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا
اللهُ اَشْهَدُ اَنَّ مُحَمَّدًا رَّسُوْلُ اللهِ حَيَّ عَلَى
الصَّلَاةِ حَيَّ عَلَى الْفَلَاحِ قَدْ قَامَتِ الصَّلَاةُ قَدْ
قَامَتِ الصَّلَاةُ اَللهُ اَكْبَرُ اَللهُ اَكْبَرُ لَا اِلٰهَ اِلَّا اللهُ

அல்லாஹு அக்பர். அல்லாஹு அக்பர்.

அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ்.

அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்.

ஹய்ய அலஸ் ஸலாஹ்.

ஹய்ய அலல் ஃபலாஹ்.


கத் காமத்திஸ் ஸலாஹ். கத் காமத்திஸ் ஸலாஹ்.

அல்லாஹு அக்பர். அல்லாஹு அக்பர்.

லாயிஇலாஹ இல்லல்லாஹ்.

## தொழும் விதம்

தொழுகின்ற ஒருவர் கஃ'பாவின் பக்கம் முகம் திருப்பி இவ்வாறு நிற்க வேண்டும்:



★ தொழுகின்றவர் கஃ'பாவின் பக்கம் முகம் திருப்பி நின்ற பிறகு 'அல்லாஹு அக்பர்' என்று கூறி இரண்டு கைகளையும் காதுகள் வரை உயர்த்த வேண்டும்.





**கைகளை கட்டும் விதம்**

★ அல்லாஹு அக்பர் என்று கூறி இரண்டு கைகளையும் காதுகள் வரை உயர்த்தி பிறகு வலது கையை இடது கையின் மீது நெஞ்சிற்கும் வயிற்றிற்கும் நடுவே வைக்க வேண்டும்.





தக்பீர் கட்டிய பிறகு கீழ்வரும் துஆவை ஓத வேண்டும்:

وَجَّهْتُ وَجْهِيَ لِلَّذِي فَطَرَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ حَنِيْفًا وَّمَا اَنَا مِنَ الْمُشْرِكِيْنَ

வஜ்ஜஹ்து வஜ்ஹிய லில்லதீ ஃபதரஸ் சமாவாத்தி வல் அர்ழ ஹனீஃபன் வமா அன மினல் முஷ்ரிகீன்.

பொருள்: வானங்களையும் பூமியையும் படைத்த அவன் பக்கம் குனிந்தவனாக என் கவனத்தை நான் அவன் பக்கம் திருப்பி விட்டேன். நான் இணைவைப்பவர்களைச் சேர்ந்தவன் அல்லன்.

அதற்குப் பிறகு ஸனா ஓத வேண்டும்.

**ஸனா:**

سُبْحٰنَكَ اللّٰهُمَّ وَبِحَمْدِكَ وَتَبَارَكَ اسْمُكَ وَتَعَالٰى جَدُّكَ وَلَآ اِلٰهَ غَيْرُكَ

சுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலா இலாஹ கைரு(க்)க.

பொருள்: அல்லாஹ்வே! நான் உன்னைப் புகழ்வதுடன் உன் தூய்மையையும் எடுத்துரைக்கிறேன். மேலும் உன் பெயர் அருளுக்குரியது. உன் மகத்துவம் மிக உயர்ந்தது. மேலும் உன்னைத் தவிர வணக்கத்திற்குரியவன் எவனுமில்லை. *(திர்மதி. கிதாபுஸ் ஸலாத். மா யகூலு இந்தல் இஃப்திதாஹிஸ் ஸலாத்)*

இந்த ஸனாவிற்கு பதிலாக கீழ்வரும் துஆவையும் ஓதலாம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த துஆவையும் ஓதியிருக்கிறார்கள்:

اَللّٰهُمَّ بَاعِدْ بَيْنِيْ وَبَيْنَ خَطَايَايَ كَمَا بَاعَدْتَّ بَيْنَ الْمَشْرِقِ وَالْمَغْرِبِ
اللّٰهُمَّ نَقِّنِيْ مِنَ الْخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الْاَبْيَضُ مِنَ الدَّنَسِ
اَللّٰهُمَّ اغْسِلْ خَطَايَايَ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ

அல்லாஹும்ம பாயித் பைனீ வபைன கதாயாய கமா பாஅத்த பைனல் மஷ்ரிகி வல் மக்ரிபி அல்லாஹும்ம நக்கினீ மினல் கதாயா கமா யுனக்கஸ் ஸவ்புல் அப்யழு மினத்தனஸ். அல்லாஹும் மக்ஸில் கதாயாய பில் மாயி வஸ்ஸல்ஜி வல்பரது.

பொருள்: அல்லாஹ்வே! கிழக்கிற்கும் மேற்கிற்கும் நீ தூரத்தை ஏற்படுத்தியது போன்று எனக்கும் என் பாவங்களுக்கும் இடையே தூரத்தை ஏற்படுத்துவாயாக. இறைவா! வெண்ணிற ஆடை அழுக்கிலிருந்து தூய்மையாக்கப்படுவதைப் போன்று நீ என்னை என் பாவங்களிலிருந்து தூய்மையாக்குவாயாக. இறைவா! நீ என்னை தண்ணீரைக் கொண்டும், பனிக்கட்டியைக் கொண்டும், ஆலங்கட்டியைக் கொண்டும் நீராட்டுவாயாக.
*(புகாரி. கிதாபு சிஃபதிஸ் ஸலாத். பாபு மாயகூலு பஃ'தத் தக்பீர்)*

அதன் பிறகு தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓத வேண்டும்.

**★ தஅவ்வுது:**

اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

அவூது பில்லாஹி மினஷ் ஷய்த்தானிர் ரஜீம்.

பொருள்: விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் நான் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன்.

**★ சூரா ஃபாத்திஹா:**

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ اِيَّاكَ نَعْبُدُ

وَإِيَّاكَ نَسْتَعِينُ اِهْدِنَا
الصِّرَاطَ الْمُسْتَقِيمَ صِرَاطَ الَّذِينَ
اَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ
عَلَيْهِمْ وَلَا الضَّآلِّينَ

பொருள்:

அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஆரம்பிக்கிறேன். எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியது. (அவன்) அளவற்ற அருளாளன்; மேன்மேலும் கருணை காட்டுபவன். அவன் தீர்ப்பு நாளின் எஜமானன். (இறைவா!) நாங்கள் உன்னையே வணங்குகிறோம். மேலும் உன்னிடமே உதவி தேடுகிறோம். நீ எங்களை நேரான வழியில் நடத்துவாயாக. உன் கோபத்திற்கு ஆளானவர்கள், வழிதவறியவர்கள் ஆகியோரின் வழியில் அல்லாமல் நீ அருள் புரிந்தவர்களின் வழியில் நடத்துவாயாக. அல்லாஹ்வே! நீ இந்த துஆவை ஏற்றுக் கொள்வாயாக.

சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு திருக்குர்ஆனின் ஏதாவதோர் அத்தியாயத்தை அல்லது அத்தியாயத்தின் சில வசனங்களை ஓத வேண்டும். உதாரணத்திற்கு சூரா இக்லாஸ் (திருக்குர்ஆனின் 112-ஆவது அத்தியாயம்). அது கீழே தரப்படுகிறது:

## சூரா இக்லாஸ்


بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○ قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ○ اَللّٰهُ الصَّمَدُ ○ لَمْ يَلِدْ ○
وَلَمْ يُوْلَدْ ○ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ○

அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் ஓதுகிறேன். அல்லாஹ் ஒருவனே ஆவான் என நீர் கூறுவீராக. அல்லாஹ் தேவைகள் அற்றவன். அவன் எவரையும் பெறவுமில்லை; அவன் எவராலும் பெறப்படவுமில்லை. மேலும் (அவனது பண்புகளில்) அவனுக்கு இணை எவருமில்லை.

*(திருக்குர்ஆன் அதிகாரம் 112 வசனங்கள் 1-5)*

இவ்வாறு சூரா ஃபாத்திஹாவும் திருக்குர்ஆனின் ஏதாவது ஒரு சூரா அல்லது சூராவின் சில வசனங்களை ஓதிய பிறகு அல்லாஹு அக்பர் எனக் கூறி ருகூ செய்ய வேண்டும். ருகூ என்றால் கைகளை கால்முட்டுக்களின் மீது வைத்து தலையும் முதுகும் நேராக இருக்கும்படி குனிந்து நிற்பதாகும்.

### ருகூவில் குனியும் முறை:



ருகூவில் முழங்கால் நேராக இருக்க வேண்டும்; மடங்கி இருக்கக் கூடாது.

இந்நிலையில் மூன்று முறை இந்த துஆவை ஓதுங்கள்:

سُبْحَانَ رَبِّيَ الْعَظِيْمِ

சுப்ஹான ரப்பியல் அழீம்.

பொருள்: மகத்துவமுள்ள என் இறைவன் தூயவன்.

பிறகு இந்த துஆவையும் ஓதலாம்:


سُبْحٰنَكَ اللّٰهُمَّ رَبَّنَا وَبِحَمْدِكَ اَللّٰهُمَّ اغْفِرْلِیْ

சுப்ஹான கல்லாஹும்ம ரப்பனா வபிஹம்திக அல்லாஹும் மக்ஃபிர்லீ.

பொருள்: தூய்மையான எங்கள் இறைவா! புகழனைத்தும் உனக்கே உரியதாகும். அல்லாஹ்வே! என்னை மன்னிப்பாயாக.

ருகூவிலிருந்து எழும்போது ‘ஸமிஅல்லாஹுலிமன் ஹமிதா’ என்று கூறுங்கள். இதன் பொருள், அல்லாஹ்வை புகழ்ந்தவரின் புகழுரையை அவன் கேட்டுக் கொண்டான் என்பதாகும். ருகூவிலிருந்து எழுந்த உடன் நேராக நில்லுங்கள்.





ருகூவிலிருந்து எழுந்து நேராக நிற்கும்போது இந்த துஆவைக் கூறுங்கள்:

رَبَّنَا وَلَكَ الْحَمْدُ

ரப்பனா வலகல் ஹம்து.

பொருள்: எங்கள் இறைவா! எல்லாவிதமான புகழும் உனக்கே உரியவையாகும்.

அத்துடன் ஹம்தன் கஸீரன் தய்யிபன் முபாரகன் ஃபீஹீ என்ற துஆவையும் கூறலாம்.

حَمْدًا كَثِيْرًا طَيِّبًا مُبَارَكًا فِيْهِ

அதன் பொருள், அதிகமான புகழும், தூய்மையும் அருளும் அதில் இருக்கின்றன என்பதாகும்.

இதற்குப் பிறகு அல்லாஹு அக்பர் எனக் கூறியவாறு சஜ்தாவிற்கு செல்லுங்கள்.

## சஜ்தா செய்யும் முறை



அல்லாஹு அக்பர் என்று கூறியவாறு சஜ்தா செய்ய வேண்டும். சஜ்தா செய்யும்போது முதலில் இரண்டு கால்முட்டுக்களையும் பிறகு இரு கைகளையும், நெற்றியையும், மூக்கையும் தரையில் பதிய வைக்க வேண்டும். சஜ்தாவின்போது முழங்கைகள் தரையோடு தரையாக இல்லாமல் சற்று உயர்ந்து இருக்க வேண்டும். தலை இரண்டு கைகளுக்கும் இடையில் இருக்க வேண்டும். கால் விரல்கள் தரையில் பட்டவாறு கிப்லாவின் பக்கம் இருக்க வேண்டும்.

சஜ்தாவில் இந்த துஆவை 3 முறை ஓதுங்கள். மூன்றுக்கு அதிகமாக ஒற்றைப்படை எண்களிலும் ஓதலாம்.


سُبْحَانَ رَبِّيَ الْأَعْلَىٰ

சுப்ஹான ரப்பியல் அஃலா

பொருள்: மேலான என் இறைவன் தூயவன்.

இத்துடன் வேறு துஆக்களையும் அரபியிலோ, தாய்மொழியிலோ கேட்கலாம். ஆயினும் ருகூவிலும் சஜ்தாவிலும் திருக்குர்ஆன் வசனங்களை ஓதுவது கூடாது.

**தொழுகையில் உட்காரும் முறை:**




பிறகு அல்லாஹு அக்பர் எனக் கூறி நிமிர்ந்து இடது காலின் மீது உட்கார வேண்டும். இரு கைகளையும் கால் முட்டுக்களின் மீது வைக்க வேண்டும். வலது காலின் விரல்கள் கிப்லாவை முன்னோக்கியவாறு குத்திட்டு நிற்க வேண்டும். இவ்வாறு இரு சஜ்தாக்களுக்கும் இடையில் நடு இருப்பில் உட்கார்ந்தவாறு இந்த துஆவை ஓதுங்கள்:

اَللّٰهُمَّ اغْفِرْلِىْ وَارْحَمْنِىْ وَاهْدِنِىْ وَعَافِنِىْ
وَاجْبُرْنِىْ وَارْزُقْنِىْ وَارْفَعْنِىْ

அல்லாஹும் மக்ஃஃபிர்லீ வர்ஹம்னீ வஹ்தினீ வஆஃஃபினீ வஜ்புர்னீ வர்ஸுக்னீ வர்ஃஃப’ஃஃனீ.

பொருள்: என் இறைவா! என்னை மன்னிப்பாயாக. என் மீது கருணை காட்டுவாயாக. என்னை நேரான வழியில் நடத்துவாயாக. என்னை நலமுடன் வைத்தருள்வாயாக. என்னை திருத்துவாயாக. எனது வாழ்வுக்குத் தேவையானவற்றை வழங்குவாயாக. என்னை உயர்த்துவாயாக.

இதற்குப் பிறகு அல்லாஹு அக்பர் எனக் கூறி மீண்டும் சஜ்தா செய்யுங்கள். பிறகு மூன்று முறை சுப்ஹான ரப்பியல் அஃலா என ஓதுங்கள். பிறகு அல்லாஹு அக்பர் எனக் கூறியவாறு இரண்டாவது ரக்அத்திற்காக எழுந்து நில்லுங்கள். பிறகு ஸனாவும், அவூதும் ஓதாமல் சூரா ஃபாத்திஹாவை பிஸ்மில்லாஹ் என்பதிலிருந்து ஓதி அதற்குப் பிறகு திருக்குர்ஆனின் ஏதாவதொரு சூராவையோ அல்லது சில வசனங்களையோ ஓதி முதல் ரக்அத்தில் செய்ததைப் போன்று அனைத்தையும் சஜ்தா வரை செய்ய வேண்டும். இரண்டாவது ரக்அத்தின் இரண்டாவது சஜ்தாவிற்குப் பிறகு அல்லாஹு அக்பர் எனக் கூறி (அத்தஹிய்யாத் இருப்பில்) உட்காருங்கள்.

**அத்தஹிய்யாத்தில் உட்காரும் முறை:**





மேலும் கீழ்வருமாறு அத்தஹிய்யாத் ஓதுங்கள்:

اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوٰتُ وَالطَّيِّبَاتُ اَلسَّلَامُ عَلَيْكَ
اَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهٗ اَلسَّلَامُ عَلَيْنَا
وَعَلٰى عِبَادِ اللّٰهِ الصّٰلِحِيْنَ۔ اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَ
وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔

அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து. அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன்னபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹூ. அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன். அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ.

பொருள்: சொல்லினாலும் செயலினாலும் பொருளினாலும் செய்கின்ற எல்லா வணக்கங்களும் அல்லாஹ்வுக்கே உரியன. நபியே! சாந்தியும் அல்லாஹ்வின் கருணையும் அவனது அருள்களும் உங்கள் மீது உண்டாவதாக. எங்கள் மீதும், அல்லாஹ்வின் நல்லடியார்கள் மீதும் சாந்தி உண்டாவதாக. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குக்குரியவன் வேறு யாருமில்லை என்றும் முஹம்மது அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார் என்றும் நான் சாட்சி கூறுகிறேன்.




(அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு என) தஷஹ்ஹுது ஓதும்போது ஷஹாதத்தின் விரலை (சுட்டு விரலை) உயர்த்துங்கள். பிறகு மடக்கிக் கொள்ளுங்கள். மூன்றாவது ரக்அத்தை தொழ வேண்டுமென்றால் அல்லாஹு அக்பர் எனக் கூறியவாறு எழுந்து நில்லுங்கள். மூன்றாவது ரக்அத்தையும், நான்காவது ரக்அத்தையும் முதல் இரண்டு ரக்அத்துகளைப் போன்றே நிறைவேற்றுங்கள். கடைசி ரக்அத்தில் அத்தஹிய்யாத்தில் தரூது ஷரீஃப் ஓதுங்கள். (அதாவது அத்தஹிய்யாத்து லில்லாஹி என்பதிலிருந்து முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ என்பது வரை ஓதுங்கள்.) பிறகு தரூது ஷரீஃபை ஓதுங்கள்.

**தரூது ஷரீஃப்**

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰى اٰلِ مُحَمَّدٍ
كَمَا صَلَّيْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ
حَمِيْدٌ مَّجِيْدٌ. اَللّٰهُمَّ بَارِكْ عَلٰى مُحَمَّدٍ وَعَلٰى اٰلِ
مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلٰى اِبْرَاهِيْمَ وَعَلٰى اٰلِ اِبْرَاهِيْمَ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ.

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின்வ் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீது. அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின்வ் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீது.

பொருள்: அல்லாஹ்வே! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டியது போன்று முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தார் மீதும் கருணை காட்டுவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

அல்லாஹ்வே! நீ இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தார் மீதும் அளவற்ற அருட்கொடைகளை வழங்கியது போன்று முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பத்தார் மீதும் அளவற்ற அருள்களை வழங்குவாயாக. நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மகத்துவமுள்ளவனும் ஆவாய்.

இதற்குப் பிறகு திருக்குர்ஆனிலோ, ஹதீஸிலோ இருக்கும் துஆக்களை அல்லது வேறு ஏதாவது துஆக்களை ஓதலாம்.

**✸திருக்குர்ஆனிலுள்ள துஆக்கள்:**

رَبَّنَا اٰتِنَا فِى الدُّنْيَا حَسَنَةً وَّفِى الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ۔

ரப்பனா ஆத்தினா ஃபித்துன்யா ஹஸனத்தன் வஃபில் ஆகிரத்தி ஹஸனதன் வகினா அஸாபன்னார்.


பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு இந்த உலகிலும் வெற்றியினை வழங்குவாயாக. மறுமையிலும் வெற்றியினை வழங்குவாயாக. மேலும் எங்களை நெருப்பின் தண்டனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக. *(திருக்குர்ஆன் 2:202 காண்க)*

رَبِّ اجْعَلْنِىْ مُقِيْمَ الصَّلٰوةِ وَمِنْ ذُرِّيَّتِىْ رَبَّنَا وَتَقَبَّلْ دُعَآءِ۔
رَبَّنَا اغْفِرْلِىْ وَلِوَالِدَىَّ وَلِلْمُؤْمِنِيْنَ يَوْمَ يَقُوْمُ الْحِسَابُ۔

ரப்பிஜ்அல்னீ முகீமஸ்ஸலாத்தி வமின் ஸுர்ரிய்யத்தீ. ரப்பனா வதகப்பல் துஆ. ரப்பனக்ஃபிர்லீ வலிவாலிதய்ய வலில் முஃமினீன யவ்ம யகூமுல் ஹிஸாப்.

பொருள்: என் இறைவா! என்னையும், என் சந்ததிகளையும், தொழுகையினை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றுபவர்களாக்கி வைப்பாயாக. எங்கள் இறைவா! என் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக. எங்கள் இறைவா! கேள்வி கணக்கு நிகழும் நாளில் எனக்கும், என் பெற்றோருக்கும், நம்பிக்கை கொண்டவர்கள் அனைவருக்கும் நீ மன்னிப்பு வழங்குவாயாக. *(திருக்குர்ஆன் 14:41,42)*

இதற்குப் பிறகு வலது பக்கம் முகம் திருப்பியவாறு அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் எனக் கூற வேண்டும். பின்னர் இடது பக்கம் முகம் திருப்பியவாறு அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் எனக் கூற வேண்டும்.





இத்துடன் தொழுகை முடிந்து விடுகிறது. ஃபர்ளு தொழுகை மூன்று அல்லது நான்கு ரக்அத்துகள் இருக்கும்போது இரண்டாவது ரக்அத்திற்குப் பிறகு நடு இருப்பில் உட்கார்ந்து அத்தஹிய்யாத்து மட்டும் ஓதி, மறுபடியும் எழுந்து நின்று மீதமுள்ள ஒன்று அல்லது இரண்டு ரக்அத்துகளை தொடர்ந்து தொழுது நிறைவு செய்ய வேண்டும். இந்த மூன்றாவது, நான்காவது ரக்அத்தில் சூரா ஃபாத்திஹாவை மட்டும் ஓதினால் போதும். அதற்குப் பிறகு வேறு எந்த சூராவையோ அல்லது வசனங்களையோ ஓத வேண்டியதில்லை. ஆனால் வித்ர் தொழுகையிலும், சுன்னத், நஃபில் தொழுகைகளிலும் மூன்றாவது நான்காவது ரக்அத்துகளிலும் சூரா ஃபாத்திஹாவுக்குப் பிறகு ஒரு சூராவையோ அல்லது சூராவின் சில வசனங்களையோ ஓத வேண்டும்.

ஃபர்ளு தொழுகைக்குப் பிறகு 33 தடவை சுப்ஹானல்லாஹ் (அல்லாஹ் தூயவன்) என்றும் 33 தடவை அல்ஹம்து லில்லாஹ் (அல்லாஹ்வுக்கே எல்லாப்

புகழும்) என்றும் 34 தடவை அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்றும் ஓத வேண்டும்.

## ஜமாஅத் தொழுகை

ஒன்றிற்கும் அதிகமான நபர்கள் இருந்தால் அவர்கள் ஒன்றாக சேர்ந்து தொழ வேண்டும். அதற்கு 'சலாத்துல் ஜமாஅத்' (கூட்டுத் தொழுகை) என்று பெயர். ஐந்து நேரங்களிலும் ஃபர்ழ் தொழுகைகள் ஜமாஅத்தாக நிறைவேற்றப்பட வேண்டும். தனியாக தொழுவதை விட ஜமாஅத்தாகத் தொழுவதில் 27 மடங்கு அதிக நற்கூலி உண்டு என நபிமொழியில் வருகிறது. குறிப்பாக சுப்ஹ், இஷா தொழுகைகளை ஜமாஅத்துடன் தொழாதவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடுமையாக எச்சரித்துள்ளார்கள்.

ளுஹ்ர், அஸ்ர் தொழுகைகளில் இமாம் சூரா ஃபாத்திஹாவுடன் இன்னொரு சூராவை அல்லது சில வசனங்களை சத்தமில்லாமல் மெதுவாக ஓத வேண்டும். சுப்ஹ், மக்ரிப், இஷா தொழுகைகளில் இமாம் சூரா ஃபாத்திஹாவுடன் இன்னொரு சூராவை அல்லது சில வசனங்களை சத்தத்துடன் ஓத வேண்டும். அதே போன்று ஜுமுஆ, பெருநாள் தொழுகைகளிலும் சத்தத்துடன் ஓத வேண்டும். இமாம் சத்தமாக ஓதும்போது பின்னால் நின்று தொழுகின்றவர்களும் சூரா ஃபாத்திஹாவை மட்டும் இமாமுடன் மெதுவாக ஓத வேண்டும். ஆனால் இமாம் சூரா ஃபாத்திஹாவிற்குப் பிறகு திருக்குர்ஆனின் ஏதாவது சூராவை அல்லது சில வசனங்களை ஓதும்போது பின்னால் நின்று தொழுகின்றவர் அதை ஓத வேண்டியதில்லை. கவனமாக அதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

மறதியின் காரணமாக இமாம் தொழுகையில் தவறு செய்தால், பின்னால் நிற்பவர்களில் ஒருவர் 'சுப்ஹானல்லாஹ்' (அல்லாஹ் தூயவன்) என்று இமாம்

கேட்கும் வகையில் கூற வேண்டும். ஆனால் இமாம் தன் தவற்றைத் திருத்திக் கொள்ளாமல் தொடந்து தொழுதால் பின்னால் நிற்பவர்கள் அவரைப் பின்பற்ற வேண்டும். இமாம் பின்னர் தமது தவறைத் தெரிந்து கொண்டால் இமாமும் பின்னால் நின்றவரும் அத்தஹிய்யாத், தரூது ஷரீஃப் ஆகியவற்றை ஓதி முடித்த பிறகு சலாம் கொடுப்பதற்கு முன் இரண்டு சஜ்தா செய்ய வேண்டும். இதற்கு ‘சஜ்தா சஹ்வ்’என்று (மறதி ஏற்பட்டதால் செய்யும் சஜ்தா என்று) கூறுவர். சஜ்தா சஹ்வில், சஜ்தாவில் ஓதும் துஆவை ஓத வேண்டும். அல்லது சஜ்தா சஹ்விற்கான பின்வரும் துஆவை ஓத வேண்டும்:

سُبْحٰنَ مَنْ لَا يَنَامُ وَلَا يَسْهُوا

சுப்ஹன மன்ல் லாயனாமு வலா யஸ்ஹூ.

## தொழுகையைப் பற்றிய பொதுவான விஷயங்கள்

1. தொழும்போது சஜ்தா செய்யும் இடத்தையே பார்க்க வேண்டும்.

2. உடல் நலமில்லாமல் இருந்தால் உட்கார்ந்து கொண்டு அல்லது படுத்துக் கொண்டு அல்லது சைகையினாலாவது தொழ வேண்டும். எந்நிலையிலும் தொழுகையை விட்டு விடக் கூடாது.

3. தொழுகின்றவருக்கு முன்னால் கடந்து செல்லக் கூடாது.

4. ளுஹ்ர் தொழுகைக்கு முன் சுன்னத் நான்கு ஆகும். அதில் மூன்றாவது, நான்காவது ரக்அத்துகளிலும் சூரா ஃபாத்திஹாவுக்குப் பிறகு ஏதேனும் ஒரு சிறிய சூராவை அல்லது சில வசனங்களை ஓத வேண்டும்.

5. இமாம் ருகூவிலிருந்து எழுவதற்கு முன் ருகூவில் வந்து சேர்ந்து கொள்கின்றவருக்கு அந்த ரக்அத் கிடைத்து விடும். ஆனால் இமாம் ருகூவிலிருந்து நிமிர்ந்து விட்ட

பிறகு வந்து சேருகின்றவருக்கு அந்த ரக்அத் கிடைக்காது. அவ்வாறு சேருகின்றவர் இமாம் சலாம் கொடுத்த பின் விடுபட்ட தனது ரக்அத்தை தொழுது முழுமை செய்ய வேண்டும்.

6. இமாம் முதல் சலாம் கொடுத்த பின் உடனடியாக எழுந்து விடுபட்ட ரக்அத்தை தொழக் கூடாது. மாறாக, இமாம் இரண்டு சலாம் கொடுத்து முடித்த பிறகே விடுபட்ட ரக்அத்துகளை தொழுவதற்காக எழ வேண்டும்.

7. விடுபட்ட ரக்அத்தை முழுமை செய்யும்போது அவர் முதல் ரக் அத்தில் சூரா ஃபாத்திஹாவிற்குப் பிறகு இன்னொரு சிறிய சூராவை அல்லது சில வசனங்களை ஓத வேண்டும்.

மேலும் இமாம் என்ன ரக் அத் தொழுகின்றாரோ அதுவே பின்னால் நிற்பவரின் ரக்அத்தாகவும் கணிக்கப்படும். உதாரணமாக, இஷா தொழுகையின் நான்காவது ரக்அத்தில் வந்து கலந்து கொள்கின்றவருக்கும் அது நான்காவது ரக்அத்தாகவே கணிக்கப்படும். அந்த நிலையில் இமாம் நான்காவது ரக்அத்தை முடித்து விட்டு சலாம் கூறி தொழுகையை முடித்து விடும்போது பின்னால் வந்து சேர்ந்தவர் எழுந்து நின்று தனக்கு விடுபட்டுப் போன மூன்று ரக்அத்தையும் அவர் ஆரம்பத்திலிருந்து தொழுவது போன்றே தொழ வேண்டும்.

அதாவது, இமாம் சலாம் கொடுத்த பிறகு அவர் எழுந்து நின்று தொழும் ரக்அத் அவருடைய முதல் ரக்அத் ஆகும். எனவே அவர் அதில் சூரா ஃபாத்திஹாவுக்குப் பிறகு ஏதாவது ஒரு சூராவையோ அல்லது சில வசனங்களையோ ஓத வேண்டும். அவ்வாறே அவர் இரு சஜ்தாவும் செய்த பிறகு அத்தஹிய்யாத்தில் உட்காராமல் இரண்டாவது ரக்அத்திற்காக எழுந்து நின்று அதை நிறைவேற்ற வேண்டும். பிறகு மூன்றாவது ரக்அத்தில் அவர் இரு சஜ்தாக்களுக்குப் பிறகு அத்தஹிய்யாத்தில் உட்கார்ந்து

அத்தஹிய்யாத் மற்றும் தரூது ஷரீஃப் ஓதி சலாம் கொடுக்க வேண்டும்.

8. இமாமுடன் ஒருவர் மட்டும் இருந்தால் அவர் இமாமுடைய வலது பக்கத்தில் நெருங்கி நிற்க வேண்டும்.மற்றொருவர் வந்து சேர்ந்தால் இருவரும் சேர்ந்து இமாமின் பின்னால் நிற்க வேண்டும்.,

9. இமாம் சூரா ஃபாத்திஹாவை ஓதி முடித்த பின்னர் மற்ற சூராவை ஓதிக் கொண்டிருக்கும்போது கூட்டுத் தொழுகையில் வந்து சேரும் ஒருவர் முதலில் சூரா ஃபாத்திஹாவை ஓத வேண்டும்.

10. ஒரு பெண் பெண்களுக்கு இமாமாக நின்று தொழ வைக்கலாம். எனினும் அந்தப் பெண் இமாம், சஃப்பிற்கு முன்னால் நிற்காமல் சஃப்பிலேயே நின்று தொழ வைக்க வேண்டும். மேலும் பெண்களின் கூட்டுத் தொழுகைக்கு பாங்கு சொல்ல வேண்டியதில்லை. இகாமத் மட்டும் சொன்னால் போதுமானது.

11. பெண்களுக்கு பெண் இமாமத் செய்யும்போது அவர் மறந்தாலோ அல்லது தவறிழைத்தாலோ பின்னால் நிற்கும் பெண்களில் ஒருவர் கைதட்டி கவனமூட்ட வேண்டும்.

## தொழுகையில் தவிர்க்கப்பட வேண்டியவை

1. தொழும்போது தலையை மறைக்காமல் தொழுவது 2. தொழுகையில் இடம், வலம், மேல் நோக்கிப் பார்த்தல் 3.கண்ணை மூடிக் கொள்ளுதல் 4.தேவையில்லாமல் இருமுதல் 5. கொட்டாவி விடுதல் 6. நெற்றியில் மண்பட்டால் துடைத்துக் கொண்டிருத்தல் 7. விரல்களை சுடக்கு விடுதல் 8. சஜ்தாவில் இரு கைகளையும் தரையுடன் சேர்த்து வைத்தல் 9. தொடைகளை வயிற்றுடன் சேர்த்து சஜ்தா செய்தல்10. அடிக்கடி உடைகளை சரி செய்து கொண்டிருத்தல் 11. இரண்டு கால்களுக்கும் சமமான பாரம் கொடுக்காமல் ஒற்றைக் காலில் நிற்றல் 12. கூட்டுத்

தொழுகையின்போது இமாமுக்கு முன்பே ருகூவிலிருந்தும் சஜ்தாவிலிருந்தும் எழுதல் 13. ஏதாவது ஒன்றின் மீது சாய்ந்து கொண்டு தொழுதல் 14. அவசர அவசரமாக தொழுதல் ஆகியவை தொழுகையில் தவிர்க்கப்பட வேண்டிய செயல்களாகும்.

**வித்ர் தொழுகை**

வித்ர் தொழுகை வாஜிப் (கட்டாயமான) தொழுகையாகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பயணத்தில் கூட வித்ர் தொழுகையைத் தொழுதார்கள். இந்தத் தொழுகையின் நேரம் இஷா தொழுகைக்குப் பிறகு சுப்ஹ் தொழுகைக்கு முன் வரையிலாகும். எனினும் நடு இரவில் எழுந்து தொழும் தஹஜ்ஜுது தொழுகைக்குப் பிறகு வித்ர் தொழுவது சிறந்ததாகும். அவ்வாறு தஹஜ்ஜுது தொழுகைக்கு எழுந்திருக்க முடியவில்லையென்றால், இஷா தொழுகையையும், பின் சுன்னத்தையும் தொழுத பிறகு வித்ர் தொழுகையை தொழலாம்.

இந்தத் தொழுகை மூன்று ரக்அத்துகளைக் கொண்டதாகும். இதை மக்ரிப் தொழுகையைப் போன்று மூன்று ரக்அத்துகளையும் ஒன்றாக சேர்த்தும் தொழலாம். அவ்வாறு தொழும்போது இரண்டு ரக்அத் தொழுது விட்டு அத்தஹிய்யாத்தில் அமர்ந்து 'அத்தஹிய்யாத்து லில்லாஹி' என்பதிலிருந்து 'வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ' என்பது வரை ஓதி விட்டு அல்லாஹு அக்பர் என்று கூறியவாறு மூன்றாவது ரக்அத்துக்காக எழுந்து கையை கட்டிக் கொள்ள வேண்டும்.

மூன்றாவது ரக்அத்திற்காக கையை கட்டிக் கொண்ட பிறகு பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் என்பதிலிருந்து சூரா ஃபாத்திஹாவை முழுமையாக ஓதிவிட்டு அதைத் தொடர்ந்து சிறிய ஒரு சூராவையோ அல்லது சில வசனங்களையோ ஓதி ருகூவுக்கு சென்று விட வேண்டும்.

ருகூவிலிருந்து, ‘சமிஅல்லாஹுலிமன்ஹமிதா’ என்று கூறியவாறு எழுந்து நிற்க வேண்டும். எழுந்து நிற்கும் நிலையில், ‘ரப்பனா வலகல் ஹம்து’ என்று கூற வேண்டும். அதற்குப் பிறகு குனூத் துஆ ஓத வேண்டும். இது ஒரு வகையாகும்.

இன்னொரு வகை, வித்ர் தொழுகையை இரண்டு ரக்அத் தொழுது சலாம் கொடுத்து விட்ட பிறகு மூன்றாவது ரக்அத்தை தனியாக தொழுவதாகும். வித்ர் தொழுகையின் மூன்றாவது ரக்அத்தில் ருகூவிலிருந்து எழுந்து நின்ற பின் ரப்பனா வலகல் ஹம்து எனக் கூறிய பிறகு கீழ்வரும் குனூத் துஆவை ஓத வேண்டும்:

اَللّٰهُمَّ اِنَّا نَسْتَعِيْنُكَ وَنَسْتَغْفِرُكَ وَنُؤْمِنُ بِكَ
وَنَتَوَكَّلُ عَلَيْكَ وَنُثْنِيْ عَلَيْكَ الْخَيْرَ وَنَشْكُرُكَ
وَلَا نَكْفُرُكَ وَنَخْلَعُ وَنَتْرُكُ مَنْ يَّفْجُرُكَ۔ اَللّٰهُمَّ اِيَّاكَ نَعْبُدُ
وَلَكَ نُصَلِّيْ وَنَسْجُدُ وَاِلَيْكَ نَسْعٰى وَنَحْفِدُ
وَنَرْجُوْ رَحْمَتَكَ وَنَخْشٰى عَذَابَكَ اِنَّ عَذَابَكَ بِالْكُفَّارِ مُلْحِقٌ

**குனூத் துஆ:**

அல்லாஹும்ம இன்னா நஸ்தயீனுக்க. வனஸ்தக்ஃஃபிருக. வனுஃஃமினுபிக. வனதவக்கலு அலைக்க. வனுஸ்னீ அலைக்கல் கைர. வ நஷ்குருக. வலா நக்ஃஃபுருக. வநக்லவு வநத்ருகு மன்யஃஃப்ஜுருக. அல்லாஹும்ம இய்யாக நஃஃபுது. வலகநுஸல்லி. வநஸ்ஜுது வ இலைக்க நஸ்ஆ.வனஹ்ஃஃபிது. வநர்ஜூ ரஹ்மதக. வநக்ஷா அஸாபக. இன்ன அஸாபக பில் குஃஃப்பாரி முல்ஹிக்.

பொருள்:

இறைவா! நாங்கள் உன்னிடமே உதவி கேட்கின்றோம். உன்னிடமே பாவமன்னிப்புக் கேட்கின்றோம். உன் மீதே நம்பிக்கை கொண்டிருக்கிறோம். உன் மீதே தவக்குல் (நம்பிக்கை) வைத்திருக்கின்றோம்.நாங்கள் உன்னிடமிருந்தே நன்மையை தேடுகிறோம். உனக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் உனக்கு நன்றிகேடு காட்டுவதில்லை. எவர் உன்னை விட்டு விலகி விடுகின்றாரோ அவரை நாங்கள் விட்டு விடுகின்றோம்.

எங்கள் இறைவா! நாங்கள் உன்னையே வணங்குகிறோம். உன்னையே தொழுகின்றோம். உனக்கே சிரம் பணிகின்றோம். உன் பக்கமே விரைகின்றோம். ஓடி வருகின்றோம். உன்னுடைய கருணையின் மீது நம்பிக்கை வைக்கின்றோம். உன்னுடைய தண்டனைக்கு அஞ்சுகிறோம். நிச்சயமாக உன்னுடைய தண்டனை நிராகரிப்பவர்களையே பிடிக்கும்.

ருகூவிலிருந்து எழுந்த பிறகு மேற்கண்ட துஆவுக்கு பதிலாகக் கீழ்வரும் துஆவையும் ஓதலாம்:

اَللّٰهُمَّ اهْدِنِىْ فِيْمَنْ هَدَيْتَ
وَعَافِنِىْ فِيْمَنْ عَافَيْتَ وَتَوَلَّنِىْ فِيْمَنْ تَوَلَّيْتَ
وَبَارِكْ لِىْ فِيْمَا اَعْطَيْتَ وَقِنِىْ شَرَّ مَا
قَضَيْتَ فَاِنَّكَ تَقْضِىْ وَلَا يُقْضٰى عَلَيْكَ
فَاِنَّهٗ لَا يَذِلُّ مَنْ وَّالَيْتَ وَاِنَّهٗ لَا يَعِزُّ
مَنْ عَادَيْتَ تَبَارَكْتَ رَبَّنَا وَتَعَالَيْتَ وَ
صَلَّى اللّٰهُ عَلَى النَّبِىِّ

பொருள்: இறைவா! நீ நேர்வழி காட்டியவர்களுடன் எனக்கு நேர்வழி காட்டுவாயாக. நீ சுகத்தைக் கொடுத்தவர்களுடன் எனக்கும் சுகத்தைக் கொடுத்தருள்வாயாக. நீ அன்பு காட்டியவர்களுடன் என் மீதும் அன்பு காட்டுவாயாக. நீ அருள்கொடை அளித்தவர்களோடு எனக்கும் அருட்கொடை அளிப்பாயாக. நீ தீர்ப்பளித்துள்ள தீமைகளிலிருந்து என்னைக் காப்பாற்றுவாயாக. நிச்சயமாக நீயே தீர்ப்பளிக்கின்றவனாவாய். உன் மீது எவராலும் தீர்ப்பு கூற இயலாது. நிச்சயமாக நீ எவர்களின் மீது அன்பு கொள்கிறாயோ அவர்கள் இழிவடைய மாட்டார்கள். மேலும் எவர்களை நீ வெறுத்து விட்டாயோ அவர்கள் உயர்வு பெறவும் மாட்டார்கள். எங்கள் இறைவா! நீ அருளுக்குரியவனும் மேலானவனுமாக இருக்கின்றாய். நீ நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அருள் புரிவாயாக.

வித்ர் தொழுகையின் முதல் ரக்அத்தில் அஃலா (சப்பிஹிஸ்ம ரப்பிகல் அஃலா) சூராவும், இரண்டாவது ரக்அத்தில் காஃபிரூன் (குல் யா அய்யுஹல் காஃபிரூன்) சூராவும் மூன்றாவது ரக்அத்தில் இக்லாஸ் (குல் ஹுவல்லாஹு அஹது) சூராவும் ஓதுவது சுன்னத் ஆகும். (ஆதாரம்: நஸாயீ)

வித்ர் தொழுகையின் கடைசி ரக்அத்தில் குனூத் துஆ ஓத மறந்து விட்டால் ‘சஜ்தா சஹ்வ்’ செய்ய வேண்டியதில்லை. ஏனெனில் குனூத் துஆ ஓதுவது கட்டாயக் கடமை இல்லை.

## தஹஜ்ஜுது தொழுகை

தஹஜ்ஜுது தொழுகை என்பது நடு இரவில் தூங்கி எழுந்து தொழும் தொழுகையாகும். இஷா தொழுகைக்குப் பிறகு கூடிய விரைவில் தூங்கி விடுவதும் நடு இரவில்

எழுந்து 'தஹஜ்ஜுது' தொழுகை தொழுவதும் நற்கூலியை தேடித் தரும் நற்செயலாகும். இரவிலும், நீர் இ(ந்தக் குர் ஆனை தஹஜ்ஜுது தொழுகையில் ஓதுவ)தற்காக சிறிது துயில் கொண்டதன் பின்னர் விழித்துக் கொள்வீராக. இது உமக்கு அதிகப்படியான ஒரு வெகுமதியாகும் என்று இறைவன் திருக்குர்ஆனில் இதைப் பற்றி வலியுறுத்திக் கூறியுள்ளான். *(திருக்குர்ஆன் 17:80)*

தஹஜ்ஜுது தொழுகை எட்டு ரக்அத்துகளைக் கொண்டதாகும். இரண்டு, இரண்டு ரக்அத்துகளாக தொழுது சலாம் கொடுக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனை தொடர்ந்து தொழுது வந்தார்கள். ஒவ்வொரு ரக்அத்திலும் நீண்ட சூராக்களை ஓதுவதும், ருகூவிலும் சுஜூதிலும் நீண்ட நேரம் செலவிடுவதும், பிற துஆக்களை அதிகமாக ஓதுவதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறையாக இருந்தது. தஹஜ்ஜுது தொழுபவர்கள் வித்ர் தொழுகையை அதற்குப் பிறகு தொழலாம். வித்ர் தொழுகையோ அல்லது தஹஜ்ஜுது தொழுகையோ விடுபட்டு விட்டால் பிறகு அதை 'கழா'வாக தொழலாம். அவ்வாறு செய்வது கட்டாயமன்று. எனினும் அதற்கு நற்கூலி உண்டு. (ஆதாரம்: நீலுல் அவ்தார்)

## தராவீஹ் தொழுகை

ரமலான் மாதத்தில் தினமும் இஷா தொழுகைக்குப் பிறகு கூட்டாகத் தொழப்படும் தொழுகை 'தராவீஹ் தொழுகை' என்றழைக்கப்படுகிறது. இதை இரண்டிரண்டு ரக்அத்தாக நான்கு முறை தொழ வேண்டும். இவ்வாறு இந்தத் தொழுகை எட்டு ரக்அத்துகளைக் கொண்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் புனித ரமலானில் இரவில் எத்தனை ரக்அத்துகள் தொழுதார்கள் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம்

கேட்கப்பட்டபோது, ‘ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ரமலானிலும், ரமலான் அல்லாத நாட்களிலும் இரவில் பதினோரு ரக்அத்துகளை விட அதிகமாகத் தொழுததில்லை’ என்று பதிலளித்தார்கள். (சஹீஹ் புகாரி)

அதாவது தராவீஹ் எட்டு ரக்அத், வித்ர் மூன்று ரக்அத் ஆக மொத்தம் பதினோரு ரக்அத்துகள்.

ரமலான் மாதத்தில் இரவில் எட்டு ரக்அத்துகளை ஜமாஅத்தாகத் தொழ வேண்டுமா? அல்லது இரவில் கடைசி நேரத்தில் வீட்டில் தனியாக எட்டு ரக்அத்துகள் (தஹஜ்ஜுது) தொழுது கொள்ளலாமா? என்று ஒருவர் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களிடம் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்கள், தராவீஹ் தொழுகை ஒரு தனிப்பட்ட தொழுகை அல்ல. உண்மையில் தஹஜ்ஜுது தொழுகையின் எட்டு ரக்அத்துகளை இரவின் முற்பகுதியில் தொழுவதே தராவீஹ் தொழுகை எனப் பெயர் வழங்கப் பெறுகிறது. இரண்டு விதமாகவும் இதனைத் தொழலாம். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இரண்டு விதமாகவும் தொழுது காட்டியுள்ளார்கள். எனினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெரும்பாலும் இரவின் இறுதிப் பகுதியில் வீட்டில் தனியாகவே இதனை தொழுது வந்தார்கள் என்று பதில் கூறினார்கள். *(மல்ஃபூஸாத் தொகுதி 9 பக்கம் 18)*

சுருக்கமாக, தொழுகை என்பது முஸ்லிம்களின் மீது விதிக்கப்பட்ட கட்டாயக் கடமை ஆகும். தொழுகை பற்றி வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

‘‘இறையன்பு, இறையச்சம், இறைவனை நினைத்தல் ஆகியவற்றை உள்ளத்தில் நிலைநிறுத்துவதற்குப் பெயர்தான் ‘தொழுகை’ ஆகும். மேலும் இதுவே

மார்க்கத்தின் சாராம்சம் ஆகும்.'' *(மல்ஃபூஸாத். தொகுதி 5 பக்கம் 254)*

இன்னோரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்:

''தொழுகையை விட மேலான இறைவணக்கம் வேறு எதுவுமில்லை. ஏனெனில் தொழுகையில் இறைவனைப் போற்றுதல், இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருதல், தரூது ஷரீஃப் ஓதுதல் இன்னும் பல துஆக்கள் அடங்கி இருக்கின்றன. தொழுகையினால் எல்லாவிதமான துக்கங்களும் துயரங்களும் விலகி விடுகின்றன. தொழுகையை நன்றாகப் புரிந்து தொழுங்கள். சுன்னத்தான துஆக்களை ஓதிய பிறகு தாய் மொழியில் துஆ செய்யுங்கள். இதனால் உங்களுக்கு மன நிறைவு ஏற்படும். இறைதியானம் தொழுகை மூலமாகவே நடைபெற முடியும். எனவேதான் 'என்னை நினைவு கூருவதற்காக நீங்கள் தொழுகையை நிலைநாட்டுங்கள்' (20:15) என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்.'' *(மல்ஃபூஸாத் தொகுதி 5 பக்கம் 433)*

## ஜுமுஆ தொழுகை

வெள்ளிக்கிழமை ஓர் அருளுக்குரிய நாளாகும். முஸ்லிம்களுக்கு இந்த நாள் ஒரு வகையில் பெருநாளேயாகும். இந்த நாளைப் பற்றி திருக்குர்ஆனில் சூரா ஜுமுஆ என்ற பெயரில் ஒரு அத்தியாயமே இருக்கிறது. வெள்ளிக்கிழமையில் ஜுமுஆ தொழுகைக்காக பாங்கு சொல்லப்படும்போது வியாபாரங்களையும் மற்ற எல்லா வேலைகளையும் விட்டு விட்டு அல்லாஹ்வை நினைவு கூர்வதற்காக உடனே பள்ளிவாயில்களில் ஒன்று சேர்ந்து ஜுமுஆ தொழுகை நடத்த வேண்டும் என அதில் கட்டளையிடப்பட்டுள்ளது. எனவே ஜுமுஆ தொழுகையை வேண்டுமென்றே விட்டு விடுகின்றவர் பாவியாகி விடுகின்றார்.

ஜுமுஆ தொழுகையின் நேரம் வெள்ளிக்கிழமை சூரியன் உச்சியிலிருந்து சாய்ந்த பிறகு ஆரம்பமாகிறது. ஜுமுஆ தொழுகைக்கு இமாமுடன் குறைந்தது மூன்று பேராவது இருக்க வேண்டும்.

நோயாளிகள், பயணிகள், பார்வையிழந்தோர், கைதிகள், ஆகியோருக்கு ஜுமுஆ தொழுவது கட்டாயமில்லை. எனவே மேற்கண்டவர்கள் ஜுமுஆவுக்குப் பகரமாக ளுஹர் தொழலாம். எனினும் அவர்களில் எவராவது தாமாகவே விரும்பி கலந்து கொள்கிறார் என்றால் அவருக்கு அதற்கான நற்கூலி கிடைக்கும்.

ஜுமுஆவில் முன் சுன்னத் நான்கு ரக்அத்துகள் ஆகும். ஆனால் இமாம் குத்பா கொடுக்க ஆரம்பித்து விட்டால் சுருக்கமாக இரண்டு ரக்அத்துகள் முன் சுன்னத் தொழுது விட்டு குத்பாவை கேட்க அமர்ந்து விட வேண்டும். ஜுமுஆ குத்பாவுக்குப் பிறகு ஃபர்ழ் இரண்டு ரக்அத்துகள் இமாமைப் பின்தொடர்ந்து தொழ வேண்டும். அதன் பிறகு, பின் சுன்னத் நான்கு ரக்அத் தொழ வேண்டும். அல்லது இரண்டு ரக்அத்தும் தொழலாம். 'உங்களில் ஒருவர் ஜுமுஆ தொழும்போது அதற்குப் பிறகு **நான்கு ரக்அ**த் பின் சுன்னத் தொழவும்' என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். *(காண்க: சஹீஹ் முஸ்லிம்)* இன்னொரு ஹதீஸ் அறிவிப்பின்படி, சுஹைல் கூறுகிறார்கள்: அவசரமாக இருக்கும் என்றால், **இரண்டு ரக்அத்** பள்ளிவாயிலிலும் இரண்டு ரக்அத் வீட்டிலும் தொழட்டும். மற்றொரு ஹதீஸ் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலியல்லாஹு அன்ஹுமா) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஜுமுஆவிற்குப் பிறகு தமது வீட்டில் **இரண்டு ரக்அத்துகளை** தொழுதார்கள்.

## ஜுமுஆவின்போது பேண வேண்டியவை

1. ஜுமுஆவில் முதல் பாங்கு சொன்னதைத் தொடர்ந்தே

ஜுமுஆ ஆரம்பமாகி விடுகிறது. எனவே ஜுமுஆ முடியும் வரை அமைதியாக இருக்க வேண்டும். தேவையில்லாமல் பேசக் கூடாது. 2. இமாம் தொழுமிடத்தில் (முஸல்லாவில்) அமர்ந்து பாங்கு சொல்ல அனுமதி கொடுத்த பிறகே பாங்கு சொல்பவர் எழுந்து இரண்டாம் பாங்கு சொல்ல வேண்டும். 3. இமாம் குத்பா கொடுக்கும்போது மவுனமாக இருந்து குத்பாவைக் கேட்க வேண்டும். ஜுமுஆ குத்பா ஆரம்பமான பிறகு வருகின்றவர் விரைவாக இரண்டு ரக்அத் முன் சுன்னத்தாக தொழலாம். 5. இமாம் ஜுமுஆ தொழுகையின் இரண்டாவது ரக்அத்தில் அத்தஹிய்யாத் நிலையில் இருக்கும்போது பின்னால் வந்து சேர்ந்து கொள்பவர் இமாம் சலாம் கொடுத்த பின் இரண்டு ரக்அத் தொழ வேண்டும். அது அவருக்கு ஜுமுஆ தொழுகையாகி விடும்; ஆயினும் அதற்கு குறைந்த கூலியே கிடைக்கும். 6. ஜுமுஆ தொழுகைக்கு களா கிடையாது. எனவே ஜுமுஆ தொழுகை கிடைக்காதவர் ளுஹ்ர் தொழ வேண்டும்.

7. கூட்டாகப் பயணம் செய்யும்போது ஜுமுஆ தொழுவது கட்டாயமில்லை; ளுஹ்ர் தொழுதாலே போதுமானது. ஆயினும் ஜுமுஆ தொழுவதிலும் தவறேதுமில்லை.

## ஜுமுஆ குத்பாவின்போது இமாம் ஓத வேண்டிய முதல் குத்பா

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطَانِ الرَّجِيْمِ . بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ .

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ . اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ . مَالِكِ يَوْمِ الدِّيْنِ . اِيَّاكَ نَعْبُدُ
وَاِيَّاكَ نَسْتَعِيْنُ . اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ . صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ
عَلَيْهِمْ . غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லா ஷரீகலஹூ. வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூவரஸூலுஹூ.அம்மா பஃது ஃபஅவூது பில்லாஹி மினஷ்ஷய்த்தானிர் ரஜீம். பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம். அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன். அர்ரஹ்மானிர் ரஹீம். மாலிக்கி யவ்மித்தீன். இய்யாக்க நஃ'புது வஇய்யாக நஸ்தயீன். இஹ்தினஸ் ஸிராத்தல் முஸ்தகீம். சிராத்தல்லதீன அன்அம்த்த அலைஹிம். கைரில் மக்ளூபி அலைஹிம் வழழ்ழால்லீன்.

இதற்குப் பிறகு இமாம் மக்களுக்குப் புரியும் மொழியில் அறிவுரை கூற வேண்டும். இவ்வாறு முதல் குத்பாவை முடித்த பிறகு இமாம் சிறிது நேரம் உட்கார்ந்து விட்டு பிறகு எழுந்து நின்று இரண்டாம் குத்பா ஓத வேண்டும்.

**இரண்டாம் குத்பா**

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ
وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا
وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَ
مَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ۔ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ
وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ۔
اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَاءِ ذِى الْقُرْبٰى
وَيَنْهٰى عَنِ الْفَحْشَاءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ
لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ۔ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

அல்ஹம்து லில்லாஹி நஹ்மதுஹூ வனஸ்தயீனுஹூ வனஸ்தக்ஃஃபிருஹூ வ நுஃஃமினு பிஹீ வனதவக்கலு அலைஹி. வனஊது பில்லாஹி மின் ஷுரூரி அன்ஃஃபுஸினா வமின் ஸய்யிஆத்தி அஃஃமாலினா மன்ய்யஹ்திஹில்லாஹு ஃஃபலா முழில்லலஹூ. வமன் யுழ்லில்ஹு ஃஃபலா ஹாதிய லஹ். வனஷ்ஹது அன்ல்லாயிலாஹ இல்லல்லாஹு வஹ்தஹூ லாஷரீகலஹூ வனஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ.

இபாதல்லாஹ். ரஹிமகுமுல்லாஹ். இன்னல்லாஹ யஃஃமுரு பில் அத்லி வல் இஹ்ஸானி வஈதாயிஸில் குர்பா வயன்ஹா அனில் ஃஃபஹ்ஷாயி வல் முன்கரி வல் பக்யி யயிழுக்கும் லஅல்லக்கும் தஸக்கரூன். உஸ்குருல்லாஹ யஸ்ருகுக்கும் வத்வூஹு யஸ்தஜிப் லக்கும் வலஸிக்ருல்லாஹி அக்பர்.

பொருள்: எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்குரியது. நாம் அவனைப் புகழ்கின்றோம். அவனிடம் உதவி தேடுகின்றோம். அவனிடம் பிழை பொறுக்கத் தேடுகின்றோம். மேலும் நாம் அவன் மீதே நம்பிக்கை வைக்கின்றோம். அவனையே நம்பியிருக்கிறோம். எங்கள் உள்ளங்களின் தீங்குகளை விட்டும் எங்களின் செயல்களின் தீங்குகளை விட்டும் நாங்கள் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகிறோம். எவருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டுகிறானோ அவரை வழிகெடுப்பவன் யாருமில்லை; எவரை அல்லாஹ் வழிகெட்டவன் என முடிவுவெடுத்து விடுகிறானோ அவருக்கு நேர்வழி காட்டுபவர் யாருமில்லை. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. அவன் ஒருவனே; அவனுக்கு இணை ஏதுமில்லை என்றும் முஹம்மது அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார் என்றும் நாங்கள் சாட்சி கூறுகிறோம்.

அல்லாஹ்வின் அடியார்களே! அல்லாஹ் உங்கள் மீது கருணை புரிவானாக. நிச்சயமாக அல்லாஹ் (நீங்கள்) நேர்மையுடன் நடந்து கொள்ளவும், நன்மை செய்யவும், உறவினர்களுக்கு (கொடுப்பதைப் போன்று) கொடுக்கவும் கட்டளையிடுகிறான். (எல்லா வகையான) வெட்கக் கேட்டிலிருந்தும், வெறுக்கத்தக்கவற்றிலிருந்தும், வரம்பு மீறுதல்களிலிருந்தும் அவன் தடுக்கின்றான். நீங்கள் விளங்கிக் கொள்வதற்காக அவன் உங்களுக்கு அறிவுரை வழங்குகின்றான். நீங்கள் அல்லாஹ்வை நினைவு கூருங்கள்; அவன் உங்களை அருள் கூர்ந்து நினைவு கூருவான். அவனையே நீங்கள் அழையுங்கள். அவன் உங்களுக்கு செவிகொடுப்பான். அல்லாஹ்வை நினைவுகூருவது மிகப் பெரியதாகும்.

## பெருநாள் தொழுகை

பெருநாள் தொழுகை 'சுன்னத்தே முஅக்கிதா' (வலியுறுத்திக் கூறப்பட்ட சுன்னத் தொழுகை) ஆகும். இரண்டு ரக்அத்துகளைக் கொண்ட இந்தப் பெருநாள் தொழுகைக்கு பாங்கோ இகாமத்தோ கிடையாது. பெருநாள் தொழுகைக்குப் பிறகுதான் பெருநாள் குத்பா கொடுக்க வேண்டும்.

பெருநாள் தொழுகையின் முதல் ரக்அத்தில் தக்பீரே தஹ்ரீமா (முதல் தக்பீர்) விற்குப் பிறகு 7 தக்பீர்கள் சொல்ல வேண்டும். இரண்டாவது ரக்அத்தில் 5 தக்பீர்கள் சொல்ல வேண்டும்.

பெருநாள் அன்று குளித்து நல்லாடை அணிந்து நறுமணம் பூசிக் கொள்வது சுன்னத் ஆகும். ஈதுல் ஃபித்ர் (நோன்புப் பெருநாள்) அன்று பெருநாள் தொழுகைக்கு முன்பாக காலையுணவை உண்டு விட்டுச் செல்வதும்,

ஈதுல் அழ்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள்) அன்று பெருநாள் தொழுகைக்குப் பின்பு காலையுணவை உண்பதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நடைமுறையாகும். அதே போன்று பெருநாள் தொழுகைக்காக செல்லும்போது ஒரு வழியாகவும், வீடு திரும்பும்போது வேறொரு வழியாகவும் வருவது சுன்னத் ஆகும். பெருநாளும் வெள்ளிக்கிழமையும் ஒரே நாளில் வந்தால் அன்று பெருநாள் தொழுகை தொழுத பின்பு வெள்ளிக்கிழமை ஜுமுஆ தொழுகையில் கலந்து கொள்வது கட்டாயமில்லை. ஜுமுஆவில் கலந்து கொள்ள முடியாதவர்கள் ளுஹர் தொழுகை தொழுதாலே போதுமானது. ஆயினும் பள்ளிவாசலில் ஜுமுஆ தொழுகை நடத்தலாம். அதாவது ஜுமுஆ தொழுவதும் ஆகுமானதாகும்

## ஜம்வு தொழுகை

தொழுகை தொடர்பாக தரப்பட்டுள்ள மற்றொரு சலுகை சில நேரங்களில் இரண்டு தொழுகைகளை ஒரே நேரத்தில் சேர்த்து தொழலாம் என்பதாகும். ளுஹ்ர் தொழுகையையும் அஸ்ர் தொழுகையையும் சேர்த்தும், மக்ரிப் தொழுகையையும் இஷா தொழுகையையும் சேர்த்தும் ஒரே நேரத்தில் தொழுவதற்கு ஜம்வு தொழுகை என்று கூறப்படுகிறது. ளுஹ்ர் நேரத்தில் ளுஹ்ர் தொழுகையையும் அஸ்ர் தொழுகையையும் சேர்த்து தொழுதால் அதற்கு 'ஜம்வு முகத்தம்' (முன்பே சேர்த்து தொழுதவை) என்று பெயர். அஸ்ர் நேரத்தில் ளுஹ்ர் தொழுகையையும் அஸ்ர் தொழுகையையும் சேர்த்து தொழுதால் அதற்கு 'ஜம்வு முஅக்கர்' (பின்னர் சேர்த்து தொழுதவை) என்று கூறப்படும்.

இமாம் ளுஹ்ர் தொழுகையை தொழ வைத்த பின்னர் அஸ்ர் தொழுகையை ஜம்வு செய்யும்போது ஒருவர் பள்ளிவாயிலில் நுழைகிறார் என்றால் முதலில் அவர்

ளுஹ்ர் தொழுகையை தனியாக தொழ வேண்டும். அதன் பிறகே அவர் அஸ்ர் தொழுகையை இமாமுடன் சேர்த்து தொழ வேண்டும். தொழுகைகள் ஜம்வு செய்து தொழப்படும்போது சுன்னத் தொழுகைகள் தொழ வேண்டியதில்லை.

ஜுமுஆ தொழுகையுடன் அஸ்ர் தொழுகையை ஜம்வு செய்து தொழுவதாக இருந்தாலும் ஜுமுஆவுக்கு முன்னுள்ள சுன்னத் தொழுகையை தொழ வேண்டும். ஏனெனில் அந்த சுன்னத் தொழுகை ஜுமுஆவின் ஃபர்ழ் தொழுகையுடன் சேர்ந்ததாகும். எனவே அதனை கண்டிப்பாக தொழ வேண்டும்.

ளுஹ்ர் நேரத்திலேயே அஸ்ர் தொழுகையும் ஜம்வு செய்து தொழப்பட்டு விட்டால் அதற்குப் பிறகுள்ள நேரங்களில் நஃபில் தொழுகைகள் தொழக் கூடாது. ஏனெனில் அஸ்ர் தொழுகைக்குப் பிறகு நஃபில் தொழுகை கூடாது.

சுப்ஹ் தொழுகையுடன் எந்தத் தொழுகையையும் ஜம்வு செய்து தொழக் கூடாது. அதே போன்று அஸ்ர் தொழுகையையும் மக்ரிப் தொழுகையையும் ஜம்வு செய்து தொழக் கூடாது. பயணம், அதிகமான மழை, மார்க்க சம்பந்தமான கூட்டம், மாநாடு ஆகிய நிகழ்ச்சிகளின்போது தொழுகைகளை ஜம்வு செய்து தொழலாம். இரண்டு தொழுகைகள் ஜம்வு செய்து தொழும்போது ஒவ்வொரு தொழுகைக்கும் தனித்தனி இகாமத் கூற வேண்டும். இவ்வாறு இரண்டு தொழுகைகளை சேர்த்து தொழும்போது சுன்னத் தொழ வேண்டியதில்லை. ஆயினும் வித்ர் தொழுகை கண்டிப்பாக தொழ வேண்டும்.

## கஸ்ர் தொழுகை

பயணிகள் 4 ரக்அத்துள்ள ஃபர்ளு தொழுகைகள் ஒவ்வொன்றையும் சுருக்கி இரண்டு ரக் அத்துகள் மட்டும் தொழலாம். இதற்கு 'கஸ்ர் தொழுகை' என்று பெயர்.

ளுஹ்ர், அஸ்ர், இஷா ஆகிய தொழுகைகள் மட்டும்தான் கஸ்ர் செய்யப்படலாம். மக்ரிப், சுப்ஹ் தொழுகைகளை கஸ்ர் செய்யக் கூடாது. கஸ்ர் செய்யப்படும் தொழுகைகளுக்கு முன்னும் பின்னும் உள்ள சுன்னத் தொழுகை தொழ வேண்டியதில்லை. ஆயினும் பயணத்தில் சுப்ஹுக்கு முன்னுள்ள இரண்டு ரக்அத் சுன்னத் தொழுகையும், இஷாவுக்குப் பின்னுள்ள மூன்று ரக்அத் வித்ர் தொழுகையும் தொழ வேண்டும்.

பயணியல்லாத இமாமின் பின்னால் நின்று ஒரு பயணி தொழுகிறார் என்றால் அப்போதுஅவர் கஸ்ர் தொழக் கூடாது. கஸ்ர் தொழுகின்ற பயணியான இமாமைப் பின் தொடர்ந்து தொழுகின்ற பயணியல்லாத ஒருவர் அந்த இமாம் சலாம் கொடுத்த பின்னர் எஞ்சிய ரக்அத்துகளை தொழுது முழுமைப்படுத்த வேண்டும். வியாபாரம், தொழில் சம்பந்தமாக நிரந்தரமாக பயணம் செய்பவர்களாக இருந்தால் அவர்கள் கஸ்ர் செய்யக் கூடாது.

ஒருவர் பயணத்தின்போது குறிப்பிட்ட ஓரிடத்தில் 14 நாட்கள் வரை தங்குகிறார் என்றால் அவர் அந்நாட்களில் கஸ்ர் செய்யலாம். அதை விட அதிகமான நாட்கள் தங்க வேண்டியது ஏற்பட்டால் 14 நாட்களுக்குப் பிறகுள்ள நாட்களில் கஸ்ர் தொழக் கூடாது. மாறாக, முழுமையாகத் தொழ வேண்டும்.

## ஜனாஸா தொழுகை

ஒரு முஸ்லிம் மரணமடைந்து விட்டால் அவருக்காக ஜனாஸா தொழுவது ஒரு ஃபர்ழே கிஃபாயா (கூட்டுக் கடமை) ஆகும். ஃபர்ழே கிஃபாயா என்றால் முழு சமுதாயத்தின் மீதும் இருக்கின்ற பொதுவான ஒரு கடமையாகும். சமுதாயத்தில் ஒரு சிலர் தொழுதாலும் அது அந்த சமுதாயம் முழுவதுக்குமான ஒரு நற்செயலாகி விடும். ஆனால் ஒருவர் கூட தொழவில்லை என்றால் முழு சமுதாயத்திற்கும் அது பாவமாகி விடும்.

ஜனாஸா தொழுகை நான்கு தக்பீர்களைக் கொண்டதாகும். ஜனாஸா தொழுகையில் ருகூவும், சுஜூதும் கிடையாது.

உளூ செய்து ஜனாஸா தொழுகைக்கான நிய்யத் வைத்து ‘அல்லாஹு அக்பர்’ என்று கூறி தக்பீர் கட்ட வேண்டும். பிறகு ஸனா (அதாவது சுப்ஹான கல்லாஹும்ம வபிஹம்திக வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக வலாயிலாஹ கைருக்க என்று) ஓதி, பின்னர் அவூது பில்லாஹி மினஷ்ஷய்த்தானிர் ரஜீம் என ஓத வேண்டும். அதன் பிறகு சூரா ஃபாத்திஹாவை ஓத வேண்டும்.

பிறகு கையை உயர்த்தாமலேயே இமாம் சத்தமாக அல்லாஹு அக்பர் என்று இரண்டாவதாக தக்பீர் கூற வேண்டும். பின்னால் தொழுபவர்களும் கையை உயர்த்தாமலேயே அல்லாஹு அக்பர் என மவுனமாக கூற வேண்டும். அத்துடன் தரூது ஷரீஃப் ஓத வேண்டும்.(அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வ அலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீது. அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வ அலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீது என்று ஓத வேண்டும்.)

பிறகு மூன்றாவது முறை அல்லாஹு அக்பர் என்று கூறி ஜனாஸா தொழுகைக்கான பின்வரும் துஆவை ஓத வேண்டும்:

اَللّٰهُمَّ اغْفِرْ لِحَيِّنَا وَمَيِّتِنَا وَشَاهِدِنَا
وَغَائِبِنَا وَصَغِيْرِنَا وَكَبِيْرِنَا وَذَكَرِنَا وَاُنْثَانَا
اَللّٰهُمَّ مَنْ اَحْيَيْتَهُ مِنَّا فَاَحْيِهِ عَلَى الْاِسْلَامِ۔
وَمَنْ تَوَفَّيْتَهُ مِنَّا فَتَوَفَّهُ عَلَى الْاِيْمَانِ۔
اَللّٰهُمَّ لَا تَحْرِمْنَا اَجْرَهُ وَلَا تَفْتِنَّا بَعْدَهُ

அல்லாஹும் மக்ஃஃபிர் லிஹய்யினா வ மய்யித்தினா வஷாஹிதினா வ காயிபினா வ ஸகீரினா வ கபீரினா வ ஸகரினா வ உன்ஸானா. அல்லாஹும்ம மன் அஹ்யய்த்தஹூ மின்னா ஃஃபஅஹ்யிஹீ அலல் இஸ்லாம். வமன் தவஃஃப்பைத்தஹூ மின்னா ஃஃபதவஃஃப்பஹூ அலல் ஈமான். அல்லாஹும்ம லாதஹ்ரிம்னா அஜ்ரஹூ வலா தஃஃப்தின்னா பஃஃதஹூ.

பொருள்: எங்கள் இறைவா! எங்களில் உயிரோடு இருப்பவர்களையும், எங்களில் மரணித்தவர்களையும், எங்களில் வருகை தந்திருப்பவர்களையும், எங்களில் வருகை தராதவர்களையும் எங்களில் சிறுவர்களையும், எங்களில் பெரியவர்களையும், எங்களில் ஆண்களையும் எங்களில் பெண்களையும் மன்னித்தருள்வாயாக.

எங்கள் இறைவா! எங்களில் உயிரோடிருப்பவர்களை இஸ்லாத்திலேயே உயிரோடிருக்கச் செய்வாயாக. எங்களில் மரணிக்கின்றவர்களை ஈமானுடன் மரணிக்கச் செய்வாயாக.

எங்கள் இறைவா! இவரால் கிடைக்கக் கூடிய பலனை எங்களுக்கு இல்லாமல் ஆக்கி விடாதிருப்பாயாக.

இவருக்குப் பிறகு எங்களை சோதனைக்கு ஆளாக்காதிருப்பாயாக.

மேற்கண்ட துஆவிற்கு பதிலாக கீழ்வரும் துஆவையும் ஓதலாம்:

اَللّٰهُمَّ اغْفِرْ لَهٗ وَارْحَمْهُ وَعَافِهٖ
وَاعْفُ عَنْهُ وَاَكْرِمْ نُزُلَهٗ وَوَسِّعْ مَدْخَلَهٗ
وَاغْسِلْهُ بِالْمَاۤءِ وَالثَّلْجِ وَالْبَرَدِ
وَنَقِّهٖ مِنَ الْخَطَايَا
كَمَا يُنَقَّى الثَّوْبُ الْاَبْيَضُ مِنَ الدَّنَسِ
وَاَبْدِلْهُ دَارًا خَيْرًا مِّنْ دَارِهٖ وَاَهْلًا خَيْرًا مِّنْ اَهْلِهٖ
وَزَوْجًا خَيْرًا مِّنْ زَوْجِهٖ وَاَدْخِلْهُ الْجَنَّةَ
وَاَعِذْهُ مِنْ عَذَابِ الْقَبْرِ وَمِنْ عَذَابِ النَّارِ

அல்லாஹும் மக்ஃபிர்லஹூ. வர்ஹம்ஹு. வஆஃபிஹீ. வஃ'ஃபுஅன்ஹு. வஅக்ரிம் நுஸுலஹூ. வவஸ்ஸிஃ மத்கலஹூ. வக்ஸில்ஹு பில் மாயி வஸ்ஸல்ஜி வல்பரதி. வ நக்கிஹீ மினல் கதாயா கமா யுனக்கஸ் ஸவ்புல் அப்யளு மினத்தனஸி. வஅப்தில் லஹு தாரன் கைரம் மின் தாரிஹீ. வ அஹ்லன் கைரம் மின் அஹ்லிஹீ. வஸவ்ஜன் கைரம் மின் ஸவ்ஜிஹீ. வ அத்கில்ஹுல் ஜன்னத வ அயிஸ்ஹு மின் அஸாபில் கப்ரி வமின் அஸாபின்னார். (நஸாயீ)

பொருள்: இறைவா! இவருக்கு பாவமன்னிப்பு வழங்குவாயாக. இவர் மீது கருணை காட்டுவாயாக. இவரை மன்னிப்பாயாக. இவரது பிழை பொறுப்பாயாக. இவருக்கு மேலான இடத்தைக் கொடுப்பாயாக. இவர் நுழையும் இடத்தை விசாலமாக்குவாயாக. இவரை தண்ணீரினாலும் பனிக்கட்டியினாலும் ஆலங்கட்டியினாலும் நீராட்டுவாயாக.

வெண்ணிற ஆடை அழுக்கிலிருந்து தூய்மையாக்கப்படுவது போன்று குறைகளிலிருந்து இவரை தூய்மைப்படுத்துவாயாக. இவருக்கு இந்த வீட்டை விட மேலான வீட்டை வழங்குவாயாக. இந்தக் குடும்பத்தை விட மேலான குடும்பத்தையும் இந்த துணையை விட மேலான துணையையும் அளிப்பாயாக. மேலும் இவரை சுவர்க்கத்தில் நுழையச் செய்வாயாக. இவரை மண்ணறையின் வேதனையிலிருந்தும் நெருப்பின் வேதனையிலிருந்தும் காப்பாற்றுவாயாக.

இதற்குப் பிறகு 'அல்லாஹு அக்பர்' என்று கூறி எதுவும் ஓதாமல் உடனே சலாம் கொடுக்க வேண்டும். இத்துடன் ஜனாஸா தொழுகை நிறைவடைந்து விடுகிறது.

குழந்தைகளின் ஜனாஸா தொழுகையில் இவ்வாறு துஆ செய்ய வேண்டும்:

اَللّٰهُمَّ اجْعَلْهُ لَنَا سَلَفًا وَّفَرَطًا وَّاجْعَلْهُ لَنَا اَجْرًا وَّذُخْرًا وَّ
اجْعَلْهُ لَنَا شَافِعًا وَّمُشَفَّعًا

''அல்லாஹும் மஜ்அல்ஹு லனா ஸலஃபன்வ் வஃபரதன். வஜ்அல்ஹு லனா அஜ்ரன்வ் வஸுக்ரன்வ் வஜ்அல்ஹு லனா ஷாஃபிஅன்வ் வமுஷஃப்பஅன்.''

பொருள்:

எங்கள் இறைவா! (குழந்தையாகிய) இதை எங்களுக்காக முன் செல்லக் கூடியதாகவும், எங்கள் சுகத்திற்குரிய வேலைகளைச் செய்யக் கூடியதாகவும், எங்களுக்குப் பிரதிபலன் கிடைக்கக் கூடியதாகவும், எங்களுக்கு பரிந்துரை செய்யக் கூடியதாகவும் ஆக்குவாயாக.

மய்யித்தை மண்ணறையில் வைக்கும்போது பிஸ்மில்லாஹி அலா மில்லத்தி ரஸூலில்லாஹ்

(அல்லாஹ்வின் பெயரால். அல்லாஹ்வின் தூதரின் மார்க்கத்தின்படி வைக்கின்றோம்) என்று கூற வேண்டும். பிறகு ஒவ்வொருவரும் கீழ்வரும் துஆவை செய்தவாறு மூன்று முறை இரு கைகளாலும் மண்ணை எடுத்து மண்ணறையில் இட வேண்டும். அந்த துஆ:

مِنْهَا خَلَقْنَاكُمْ وَفِيهَا نُعِيدُكُمْ وَمِنْهَا نُخْرِجُكُمْ تَارَةً أُخْرَىٰ

மின்ஹா கலக்னாக்கும். வஃபீஹா நுயீதுக்கும். வமின்ஹா நுக்ரிஜுக்கும் தாரத்தன் உக்ரா.

பொருள்: ''(பூமியாகிய) இதிலிருந்தே நாம் உங்களைப் படைத்தோம். அதனுள்ளேயே உங்களைத் திரும்பச் செய்வோம். அதிலிருந்தே உங்களை மீண்டும் வெளிப்படுத்துவோம்.'' *(திருக்குர்ஆன் 20:56)*

மண்ணறை மூடப்பட்டதும் அவருடைய மக்ஃபிரத்திற்காக (மன்னிப்பிற்காக) துஆச் செய்யலாம்.

மண்ணறைகளிலுள்ள இடத்திற்குச் சென்று மரணித்தவர்களுக்காக இறைவனிடம் துஆ செய்வது சுன்னத் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நடைமுறை) ஆகும். அடக்கஸ்தலத்தில் நுழையும்போது இவ்வாறு துஆ செய்ய வேண்டும்:

اَلسَّلَامُ عَلَيْكُمْ يَا اَهْلَ الْقُبُوْرِ يَغْفِرُ اللهُ لَنَا وَلَكُمْ اَنْتُمْ سَلَفُنَا وَنَحْنُ
بِالْاَثَرِ وَاِنَّا اِنْ شَاءَ اللهُ بِكُمْ لَاحِقُوْن

''அஸ்ஸலாமு அலைக்கும் யாஅஹ்லல் குபூர் யக்ஃபிருல்லாஹு லனா வலக்கும். அன்த்தும் ஸலஃபுனா வ நஹ்னு பில் அஸரி வ இன்னா இன்ஷா அல்லாஹு பிகும் லாஹிகூன்''

பொருள்: மண்ணறையிலுள்ளவர்களே! உங்கள் மீது சாந்தி உண்டாவதாக! அல்லாஹ் உங்களையும் எங்களையும் மன்னிப்பானாக. நீங்கள் எங்களுக்கு முன்னால் சென்று விட்டீர்கள். நாங்கள் உங்களுக்குப் பின்னால் வருகின்றவர்களாக இருக்கின்றோம்.

## இஸ்திகாரா தொழுகை

ஒரு வேலையைச் செய்யும் முன் அதில் நன்மை ஏற்பட வேண்டும் அல்லது அது தொடர்பாக இறைவனின் வழிகாட்டல் கிடைக்க வேண்டும் என்பதற்காக இறைவனிடம் வேண்டித் தொழும் தொழுகையே 'இஸ்திகாரா' தொழுகை ஆகும். இஸ்திகாரா என்பதன் சொற்பொருளே 'நன்மையை வேண்டுதல்' என்பதாகும்.

இதற்கு ஏற்புடைய நேரம் இரவு உறங்கும் முன்னுள்ள நேரமாகும். இது இரண்டு ரக்அத்துகளைக் கொண்டது.

முதல் ரக்அத்தில் சூரா ஃபாத்திஹாவிற்குப் பிறகு சூரத்துல் காஃபிரூன் (குல் யா அய்யுஹல் காஃபிரூன்) இரண்டாவது ரக்அத்தில் சூரா இக்லாஸ் (குல்ஹுவல்லாஹு அஹது) ஓதுவது சுன்னத் ஆகும்.

இரண்டு ரக்அத்துகளையும் முடித்து விட்டு அத்தஹிய்யாத், தஷஹ்ஹுது, தரூது ஷரீஃப் எல்லாம் ஓதி முடித்த பிறகு சலாம் கொடுப்பதற்கு முன்னர் மனமுருகி பின்வரும் துஆவை செய்ய வேண்டும்:

اَللّٰهُمَّ اِنِّيْ اَسْتَخِيْرُكَ بِعِلْمِكَ وَاَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ وَاَسْئَلُكَ مِنْ
فَضْلِكَ الْعَظِيْمِ فَاِنَّكَ تَقْدِرُ وَلَا اَقْدِرُ وَتَعْلَمُ وَلَا اَعْلَمُ وَاَنْتَ عَلَّامُ
الْغُيُوْبِ اَللّٰهُمَّ اِنْ كُنْتَ تَعْلَمُ اَنَّ هٰذَا الْاَمْرَ خَيْرٌ لِّيْ فِيْ دِيْنِيْ وَمَعَاشِيْ وَ
عَاقِبَةِ اَمْرِيْ فَاقْدِرْهُ لِيْ وَيَسِّرْهُ لِيْ ثُمَّ بَارِكْ لِيْ فِيْهِ

وَإِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هٰذَا الْأَمْرَ شَرٌّ لِّي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي فَاصْرِفْهُ عَنِّي وَاصْرِفْنِي عَنْهُ وَاقْدِرْ لِيَ الْخَيْرَ حَيْثُ كَانَ ثُمَّ أَرْضِنِي بِهٖ

அல்லாஹும்ம இன்னீ அஸ்தகீருக பிஇல்மிக வ அஸ்தக்திருக பிகுத்ரதிக வ அஸ்அலுக மின் ஃபழ்லிகல் அழீம் ஃப இன்னக தக்திரு வலா அக்திரு வதஃலமு வலா அஃலமு வ அன்த அல்லாமுல் குயூப் அல்லாஹும்ம இன்குன்த்த தஃலமு அன்ன ஹாஸல் அம்ர கைருன் லீ ஃபீ தீனீ வ மஆஷீ வ ஆகிபதி அம்ரீ ஃபக்திர்ஹுலீ வ யஸ்ஸிர்ஹு லீ ஸும்ம பாரிக் லீ ஃபீஹி.

வஇன் குன்த்த தஃலமு அன்ன ஹாஸல் அம்ர ஷர்ருன் லீ ஃபீதீனீ வ மஆஷீ வ ஆகிபத்தி அம்ரீ ஃபஸ்ரிஃப்ஹு அன்னீ வஸ்ரிஃப்னீ அன்ஹு வக்திர் லியல் கைர ஹைஸு கான ஸும்மர்ழினீ பிஹீ.'' (புகாரி, திர்மிதி, இப்னுமாஜா)

பொருள்:

இறைவா! நான்  உன் அறிவின் மூலமாக உன்னிடம் நன்மையை தேடுகின்றேன். உன் மேலான அருளிலிருந்து நான் உன்னிடம் வேண்டுகிறேன். நிச்சயமாக நீ ஆற்றல் உடையவன் ஆவாய். என்னிடம் எந்த ஆற்றலும் இல்லை. நீ நன்கு அறிந்தவன் ஆவாய்; நான் அறியாதவனாக இருக்கிறேன். நீயே மறைவானவற்றை நன்கறிந்தவனாக இருக்கின்றாய்.

அல்லாஹ்வே! இந்த விஷயம் என் மார்க்கத்திற்கும், என் வாழ்விலும் என் வேலையின் முடிவிலும் எனக்கு நன்மை பயப்பதாக இருக்கிறதென்று நீ அறிந்தால் அதை நீ எனக்காக ஏற்படுத்துவாயாக. மேலும் அதை நீ எனக்கு

இலேசாக்கி வைப்பாயாக. பிறகு அதில் நீ எனக்காக அருள் செய்வாயாக.

என்னுடைய இந்த விஷயம் என் மார்க்கத்திற்கும், என் வாழ்விற்கும், என் வேலையின் முடிவிலும் எனக்கு தீமை பயப்பதாக இருக்கிறதென்று நீ அறிந்தால் என்னை விட்டு அதை விலக்குவாயாக; அதை விட்டு என்னை விலக்குவாயாக. நன்மை எங்கிருந்தாலும் அதை எனக்காக ஏற்படுத்துவாயாக.

## கிரகணத் தொழுகை

சூரிய சந்திர கிரகணத்தின்போது அனைவரும் பள்ளிவாசலில் ஒன்று கூடி கிரகணத் தொழுகை தொழ வேண்டும். இது இரண்டு ரக்அத்துகள் ஆகும். இமாம் திருக்குர்ஆன் வசனங்களை சத்தமாக ஓத வேண்டும். ஒவ்வொரு ரக்அத்திலும் இரண்டு ருகூவுகள் உண்டு. முதல் ருகூவிலிருந்து எழுந்த பின்னர் மீண்டும் கை கட்டிய நிலையில் நின்றவாறு முன்பு ஓதியது போன்று கிரா அத்தை மட்டும் சத்தமாக ஓத வேண்டும். பிறகு இரண்டாம் முறை ருகூவில் குனிய வேண்டும். பிறகு ருகூவிலிருந்து எழுந்து சுஜூதுக்குச் செல்ல வேண்டும்.

இந்த இரு ரக்அத்துகளிலும் இமாம் நீண்ட சூராக்களை ஓத வேண்டும். தொழுகைக்குப் பின் இமாம் குத்பா கொடுக்க வேண்டும். அதில் பாவமன்னிப்பு, பிழைபொறுக்கத் தேடுதல் செய்யுமாறு மக்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

## இஸ்திஸ்கா தொழுகை

மழைக்காக இறைவனை வேண்டி தொழும் தொழுகை 'இஸ்திஸ்கா' தொழுகை ஆகும். இஸ்திஸ்கா என்றால் தண்ணீரை வேண்டுதல் என்று பொருள். இது இரண்டு ரக்அத்துகள் ஆகும். இமாம் கிராஅத்தை சத்தமாக ஓத

வேண்டும். தொழுகை முடிந்த பின் எல்லாரும் கிப்லாவை முன்னோக்கியவர்களாக இரு கைகளையும் உயர்த்தி பின்வரும் துஆவை ஓத வேண்டும்:

اَللّٰهُمَّ اسْقِنَا غَيْثًا مُّغِيْثًا مَّرِيًّا مُّرِيْعًا نَّافِعًا غَيْرَ ضَارٍّ عَاجِلًا
غَيْرَ آجِلٍ اَللّٰهُمَّ اسْقِ عِبَادَكَ وَبَهَائِمَكَ وَانْشُرْ رَحْمَتَكَ وَ
اَحْيِ بَلَدَكَ الْمَيِّتَ
اَللّٰهُمَّ اسْقِنَا اللّٰهُمَّ اسْقِنَا اللّٰهُمَّ اسْقِنَا

அல்லாஹும் மஸ்கினா கய்ஸம் முகீஸன்ம் மரிய்யம் முரீஅன் நாஃபிஅன் கைர ழார்ரின். ஆஜிலன் கைர ஆஜிலின். அல்லாஹும்மஸ்கி இபாதக வ பஹாயிமக்க வன்ஷுர் ரஹ்மதக. வ அஹ்யி பலதகல் மய்யித்த. அல்லாஹும் மஸ்கினா. அல்லாஹும் மஸ்கினா. அல்லாஹும் மஸ்கினா. (அபூதாவூது, முஸ்னது அஹ்மது)

பொருள்: எங்கள் இறைவா! எங்களுக்கு மழையைக் கொடுக்கின்றதும், கஷ்டங்களை நீக்குகின்றதும், பலனைத் தருகின்றதும், நஷ்டத்தைத் தராததும், சீக்கிரம் வருகின்றதும், தாமதமாகாததுமாகிய தண்ணீரை வழங்குவாயாக. இறைவா! நீ உனது அடியார்களுக்கும் உயிரினங்களுக்கும் தண்ணீரை வழங்குவாயாக. மேலும் உன் கருணையைப் பரப்புவாயாக. இறந்து விட்ட உனது நகரத்தை உயிரூட்டுவாயாக. இறைவா! நீ எங்களுக்குத் தண்ணீரை வழங்குவாயாக! எங்களுக்குத் தண்ணீரை வழங்குவாயாக!! எங்களுக்குத் தண்ணீரை வழங்குவாயாக!!!

இந்த துஆவை ஓதிய பிறகு இமாம் தனது போர்வையை மாற்றிப் போட வேண்டும். இதைப் போன்றே வானம், பூமி ஆகியவற்றின் தற்போதுள்ள வறண்ட நிலையை மாற்றி விடுவாயாக என்று இறைவனிடம் மன்றாடுவதைக் குறிப்பதற்காகவே இவ்வாறு செய்யப்படுகிறது.

## ஹாஜத்துத் தொழுகை

ஹாஜத்து என்றால் தேவை என்று பொருள். மனிதனுக்கு ஏதாவது ஒன்று தேவைப்பட்டால் அல்லது உலக விஷயங்களில் ஏதேனும் ஒரு வேலை ஆக வேண்டும் என்றால் அது பற்றி எவ்வாறு துஆ செய்ய வேண்டும் என்றும் ஹதீஸில் வந்துள்ளது.

நன்றாக ஒளு செய்து இரண்டு ரக்அத் தொழுது இறைவனைப் புகழ்ந்து ஸனா ஓதிய பின்னர் தரூது ஷரீஃப் (அல்லாஹும்ம சல்லி அலா முஹம்மதின்.......) ஓதி பிறகு கீழ்வரும் துஆவைச் செய்ய வேண்டும்:

لَا اِلٰهَ اِلَّا اللّٰهُ الْحَلِيْمُ الْكَرِيْمُ سُبْحَانَ اللّٰهِ رَبِّ الْعَرْشِ الْعَظِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ اَسْئَلُكَ مُوْجِبَاتِ رَحْمَتِكَ وَعَزَائِمَ
مَغْفِرَتِكَ وَالْغَنِيْمَةَ مِنْ كُلِّ بِرٍّ وَّالسَّلَامَةَ مِنْ كُلِّ اِثْمٍ لَا تَدَعْ
لِيْ ذَنْبًا اِلَّا غَفَرْتَهٗ وَلَا هَمًّا اِلَّا فَرَّجْتَهٗ وَلَا حَاجَةً هِيَ لَكَ رِضًا اِلَّا
قَضَيْتَهَا يَا اَرْحَمَ الرَّاحِمِيْنَ

லா இலாஹ இல்லல்லாஹுல் ஹலீமுல் கரீம்

சுப்ஹானல்லாஹி ரப்பில் அர்ஷில் அழீம் அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் அஸ்அலுக மூஜிபாத்தி ரஹ்மதிக வ அஸாயிமி மக்ஃபிரத்திக வல் கனீமத்த மின் குல்லி பிர்ரிவ் வஸ்ஸலாமத்த மின் குல்லி இஸ்மின் லா ததஃலீ ஸன்பன் இல்லா கஃபர்தஹூ வலா ஹம்மன் இல்லா ஃபர்ரஜ்தஹூ. வலா ஹாஜத்தன் ஹிய லகரழன் இல்லா கழைத்தஹா யா அர்ஹமர் ராஹிமீன். (திர்மிதி)

பொருள்: வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் சகித்துக் கொள்பவனும் மதிப்பிற்குரியவனும் ஆவான். அல்லாஹ் தூய்மையானவன். அவன் மகத்தான அர்ஷின் அதிபதியாவான். எல்லா உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியது. இறைவா! நான் உனது கருணையை வேண்டுகிறேன். உனது மேலான மன்னிப்பையும் வேண்டுகிறேன். ஒவ்வொரு நன்மையிலிருந்தும் ஒரு பெரும் பகுதியையும் ஒவ்வொரு பாவங்களிலிருந்தும் பாதுகாப்பையும் வேண்டுகிறேன். எனக்கென்று எந்தப் பாவமும் இல்லாத அளவுக்கு என்னை நீ மன்னிப்பாயாக. கருணை செய்பவர்களில் மிக மேலான கருணை செய்பவனே! எந்தவொரு துக்கத்தையும் அகற்றாமல் விட்டு விடாதே. உனக்கு விருப்பமுள்ள எந்த தேவையையும் நிறைவேற்றாமல் விட்டு விடாதே.